பொழுது போக்குவது அப்படி ஒன்றும் சிரமமாக இல்லை. மூன்றாவது மாடியில் தங்குபவர்களைக் கவனிப்பதற்காக இரண்டு மூன்று பெண் சிப்பந்திகள் இருந்தார்கள்.

அறைக்குள் நுழைந்து முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு படுத்தேன். அப்படி ஒன்றும் களைப்பாகவும் இல்லை. சும்மா கண்ணை மூடிக்கொண்டேன்.

“டொட், டொட்...”

“யார்?”

“உள்ளே வலராம்...”

ஒரு பெண் வந்தாள். ஹோட்டல் சிப்பந்தி.

“ஏதாவது சாப்பிடுகிறீர்களா?”

“என்ன இருக்கிறது?”

என் தலைமாட்டில் வந்து சுவரில் தொங்கிய உணவுப் பட்டியலை எடுத்துக் கொடுத்தாள். பார்த்தேன்.

“எனக்குப் பிடித்தது ஒன்றுமே இல்லையே!”

“ஏன்?”

“நான் சாகபட்சிணி. இதில் பன்றி, மாடு, கோழிக்குஞ்சு- இப்படியே இருக்கின்றனவே.”

“ஏன், மீன் சாப்பிடலாமே?”

“மீன் தாவரமா?”

“மீன் கூடவா சாப்பிடமாட்டீர்கள்?”

“ம்ஹூம்.”

“சரி. ஆம்லெட் இருக்கிறதே.”

“அது முட்டையிலிருந்து செய்கிறதல்லவா?”

“முட்டை கூடவா சாப்பிடமாட்டீர்கள்?”

“ம்ஹூம்.”

“முழு சைவமா நீங்கள்?”

“ஆமாம்.”

“எனக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறதே!”

“எதற்கு?”

“நீங்கள் சாப்பிடும்படியாக இங்கு ஒன்றும் இல்லையே”.

“பிஸ்கட் இருக்கிறதா?”

“இருக்கிறது - பிஸ்கத்து, சுருள் ரொட்டி எல்லாம் இருக்கிறது.”

“பிஸ்கத்தும் காப்பியும் கொண்டா.”

“போதுமா?”

“என்ன செய்கிறது?”

“எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறதே.”

“வருத்தப் படாதே, பிஸ்கத்தும் இரண்டு காப்பியும் கொண்டா.”

“சரி. இதோ வந்துவிடுகிறேன்.”

“காப்பிக்குப் பால் வேண்டும். கறுப்புக் காப்பி வேண்டாம்.”

“பால் சாப்பிடுகிறீர்களா?”

“ஏன்?”

“முழு சைவம் என்று சொன்னாற்போல் இருக்கிறதே!”

“பரவாயில்லை. நீ ரொம்ப வருத்தப்படுகிறாயே. அதற்காகப் பாலாவது போட்டுக் காப்பியைக் குடித்து வைக்கிறேனே.”

“வேண்டாம். எனக்காகப் பிடிக்காததையெல்லாம் சாப்பிடாதீர்கள். என்னை மன்னிக்க வேண்டும்.”

“பரவாயில்லை. பாலும் கொண்டுவா!” என்று கதறினேன்.

“நிச்சயமாகவா?”

“நிச்சயமாக.”

இந்தப் பேச்சு எனக்கு ஜப்பானில் புதிய அனுபவமில்லை. இரண்டு மாதமாகப் பழகிப்போனது. சாப்பாட்டைப் பற்றியே பல இடங்களில் பேசிப் பொழுதைக் கழித்திருக்கிறேன். மீனும் முட்டையும் சைவ உணவு என்று பலர் சாதிப்பதும் பால் சைவ உணவு என்று நான் சாதிப்பதும் தினம் நடக்கிற தத்துவச் சர்ச்சை. காப்பியைக் கொண்டுவந்தவள் நான் வற்புறுத்தியதற்காக ஒரு காப்பியைக் கறுப்பாகக் குடித்தாள். சைவ, அசைவச் சர்ச்சை மீண்டும் தொடர்ந்து பொழுதைத் தள்ளிற்று.

மூன்று மணி அடித்தது. என் ஜப்பானிய நண்பர் வராததைச் சொன்னேன். “இங்கு ஊர் காட்டிகள் இருக்கிறார்கள்...உங்களை அழைத்துப் போவார்கள். நான் வரச் சொல்லட்டுமா ஒருவரை?”

“இங்கிலீஷ் பேசுவாரா?”

“உங்களுக்குத் தேவையானது பேசுவார்.”

அவள் போனாள். அவன் வந்தான். குளிருக்காக மேல் கோட்டை மாட்டிக்கொண்டு கிளம்பினேன். நாடகக் கொட்டகை, ஒரு கீஷா நடனம் என்று வகைக்கு ஒன்றாகப் பார்த்துவிட்டு இரவு பதினோரு மணிக்கு வந்து சேர்ந்தோம்.

“எனக்கு ஒன்பது மணிக்கே ட்யூட்டி முடிந்துவிட்டது. ஆனால் உங்களிடம் விடைபெற்றுக்கொள்ள வில்லையே என்று தங்கியிருந்தேன். காலையில் வருகிறேன். குழந்தை மாதிரி தூங்குங்கள்” என்று விடைபெற நின்றாள் அவள்.

“நான் இரண்டு மணிக்குத்தான் தூங்குகிற பழக்கம்.”

“எனக்கு வருத்தமாக இருக்கிறதே.”

“ஏன்?”

“உங்களுக்குப் பேசக்கூட ஆள் இருக்காதே. நான் வேண்டுமானால் இரண்டு புத்தகங்கள் தரட்டுமா?”

“கொண்டா.”

போகும்போது இரண்டு புத்தகங்களைக் கொடுத்துவிட்டுப் போனாள் அவள்.

ஒன்று கதைப் புத்தகம். இன்னொன்று கட்டுரைத் தொகுப்பு. கதைப்புத்தகம் ஜப்பான்காரர்கள் எழுதின கதைகள். ஆங்கில மொழிபெயர்ப்பு இன்னொன்று ஜப்பானியர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி ஆங்கிலத்தில் யாரோ மேல் நாட்டவர் எழுதியது. வகைக்குக் கொஞ்சமாகப் படித்தேன். தூங்கினேன். காலையில் எழும்போது எட்டு மணி. “குட்மார்னிங்!”

“ஓஹாயோ கொஸாய்மஸ்” என்று நான் பதில் கொடுத்த போது அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

“உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா?” என்று கேட்டாள்.

“அதுதான் பேசினேனே!”

“ஜப்பான் மொழி உங்கள் காதுக்கு எப்படி இருக்கிறது?”

“ரொம்ப இனிமை.”

“ரொம்ப நன்றி. ஜப்பான் மொழி பேசுவீர்களோ?”

“நன்றாகப் பேசுவேன். ‘குட்மார்னிங்’, ‘குட்ஈவினிங்’ ‘குட்நைட்’ ‘முட்டை சாப்பிடமாட்டேன்’, ‘மரக்கறிதான் சாப்பிடுவேன்’ - ஐந்தும் தலைகீழ்ப் பாடம்.”

“போதுமே. உணவுப் பிரச்னை தீர்ந்துவிட்டது” என்று சிரித்தாள் அவள். “நன்றாகத் தூங்கினீர்களா?”

“குழந்தை மாதிரி தூங்கினேன்.”

மறுபடியும் சிரித்தாள் அவள். இந்த முகமலர்ச்சி ஜப்பானில் தண்ணீர் பட்டபாடு. கோடி ரூபாய் கொடுத்தாலும் சிடுசிடுப்புக் கிடைக்காது. இந்த மாதிரி மனுஷர்களோடு பேசுவதற்கு என்ன தயக்கம்? ஹோட்டலில் தங்குபவர்களுக்குப் பொழுது போக என்ன என்ன பேசலாம் என்று அவளுக்கு அற்றுபடியாக இருந்திருக்கவேண்டும். போன் மணியைக் கேட்டுத் தூக்கினபோது, “யோஷிகி வந்திருக்கிறார். வரச்சொல்லலாமா?” என்று செய்தி வந்தது. மணி பத்து ஒன்றரை மணிநேரம் பொழுது போனது தெரியாமல் பேசியிருக்கிறாள் இவள்! “நண்பர் யோஷிகி வருகிறார்” என்றேன்.

“நல்லது. அப்படியானால் இன்று ஊர் காட்டி தேவையில்லை.”

“வேண்டாம்.”

யோஷிகி வந்தேவிட்டார். நல்ல வெள்ளை நிறம் மூக்குக் கண்ணாடி.

“நீங்கள்....?”

“ஆமாம்.” என்று பெயரைச் சொன்னேன்.

“நான் யோஷிகி நேற்று வர முடியல. திடீர் என்று அவசர வேலை.”

“பரவாயில்லை.”

“அறை வசதியாக இருக்கிறதா?”

“நேற்று என்ன செய்தீர்கள்?”

“ஒரு வழிகாட்டியுடன் சில இடங்களைப் பார்த்தேன்” என்று பார்த்த இடங்களைச் சொன்னேன்.

“நல்லது. இன்று முழுவதும் நான் சும்மாத்தான் இருக்கிறேன். நீங்கள் எத்தனை நாட்கள் தங்கப் போகிறீர்கள்?”

“இன்னும் இரண்டு நாட்கள்.”

“அப்படியா? நீங்கள் ஊருக்குப் போகிறவரையில் உங்களோடு கூடவே நான் இருந்திருக்க முடியும். இந்தத் தடவை முடியவில்லை. இன்று முழுவதும் இருந்து முக்கியமான இடங்களுக்கு அழைத்துப் போகிறேன். அதற்குப் பிறகு தங்க முடியாது என்று நினைக்கிறேன். பொருட்படுத்த மாட்டீர்களே?”

ஐயோ!என்ன இது நான் பார்த்துக்கொள்கிறேன்.

‘யோஷிகி உயரம் என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது ஐந்தரை அடி உயரம். குளிரைத் தடுக்க ஜப்பான் முழுவதும் கம்பளிக் கோட்டு, கால் சட்டை, கழுத்துப்பட்டி எல்லாம் அணிகிற பருவம் அது. அவருக்கும் அந்த உடைகள் எடுப்பாக இருந்தது. உட்கார்ந்துகொண்டு பேச ஆரம்பித்தார் அவர்.

“ஜப்பானுக்கு எப்போது வந்தீர்கள்?”

“இரண்டு மாதமாயிற்று.”

“ஜப்பான் பிடித்திருக்கிறதா?”

“ஜப்பான் பிடிக்கவில்லை என்று எவனாவது சொன்னால் அவன் பரம அரசிகனாக இருக்க வேண்டும்.”

“ஓ! ரொம்ப நன்றி” என்று சிரித்தார் அவர்.

“அழகான ஆரோக்கியமான ஜனங்கள். நீங்கள் நான் ஜப்பானில் காலடிவைத்து இரண்டு மாதமாயிற்று. இன்னும் ஒரு நரை மயிரைப் பார்க்கவில்லை. ஒரு சிடுமூஞ்சியைப் பார்க்கவில்லை. எந்த பஸ் ஸ்டாப்பிலும் ஒரு நிமிஷத்துக்கு மேல் காத்திருக்கவில்லை. ஏறின பஸ்ஸிலும் ‘சில்லறை இல்லேன்னா இறங்கு சார்’ என்று எந்தக் கண்டக்டரும் கத்தவில்லை. சில்லறை கொடுக்க மறந்து போகவுமில்லை.

தெருவிலோ தியேட்டரிலோ யாரும் இரைந்து பேசவில்லை. பத்து கல்லூரி மாணவர்கள் சேர்ந்து உல்லாசமாகப் போகும் போதுகூடக் காச்சு மூச்சு என்று தலைகால் தெரியாமல் கத்தவில்லை. மாணவிகளைப் பார்த்துச் சீட்டியடிக்கவில்லை. எந்தச் சாமானும் கெட்டுப் போகவுமில்லை. ஹிபியா பார்க்கில் மத்தியானம் ஆபீஸ் இடைவேளையில் ஆயிரம் ஜனங்கள் வந்து கையில் கொண்டு வந்த டிபனைச் சாப்பிட்டுவிட்டு அரைமணி இளைப்பாறிவிட்டுப் போகிறார்கள். நானும் போய் உட்கார்ந்தவன் ஒரு பெஞ்சில் எண்ணூற்றுச் சொச்ச ரூபாய் இருந்த பர்ஸ், டயரி எல்லாவற்றையும் மறந்துவிட்டுப் போய்விட்டேன். மூன்றரை மணிக்கு மேல் ஞாபகம் வந்தது. திரும்பி ஓடி வந்தேன். மூன்று மணிக்குப் போகும்போது யாரும் இங்கு கத்துவதில்லை. சிகரெட் பிடிப்பதில்லை. படிக்கிறார்கள், இல்லாவிட்டால் கண்ணை மூடிக்கொண்டு விடுகிறார்கள்.”

“போதும் போதும்“ என்று சிரிக்க ஆரம்பித்தார் யோஷிகி. நான் நெட்டுருப் போட்டு ஒப்பிப்பது மாதிரி சொன்னதுதான் அவருக்குக் கிச்சுக் கிச்சு மூட்டியிருக்க வேண்டும்.

“ஏன் நான் சொல்வது சரியில்லையா? கண்ணால் பார்த்து அநுபவித்ததைச் சொல்கிறேன். “உங்கள் மக்களுக்குத் தான் என்ன சுத்தம்! என்ன கட்டுப்பாடு! என்ன கலை உணர்ச்சி! காரியங்கள் செய்வதில்தான் எவ்வளவு சுருக்கு! எவ்வளவு நருவிசு! மேம்புல் மேயாமல் ஆழ்ந்து செயலாற்றக் கூடிய பண்பு! என்ன ஓயாத உழைப்பு!”

“ரொம்ப நன்றி. பஸ்ஸுக்காக் காத்திராதது, கண்டக்டர்கள் இனிமையாகப் பேசுவது எல்லாம் சரிதான். பெண் கண்டக்டர்கள் பேசுவது வேறு எப்படி இருக்க முடியும். ஆனால் ஒரு பெண் வந்து பஸ்ஸில் ஏறினால் ஓர் ஆணும் எழுந்து இடம் தரமாட்டான் இங்கே! நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?”

“உங்கள் பெண்கள் மிக்க பலசாலிகள்!”

“இல்லை. எங்கள் ஆண்கள் அவ்வளவு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.”

பல விஷயங்களுக்கு மாற்றுச் சொல்லிக்கோண்டே வந்தார் யோஷிகி. ஆனால் உள்ளுக்குள் அவருக்குப் பூரிப்பு. 'மிளகுத் தண்ணி' இங்கிலீஷ் அகராதிக்குப் போய்விட்டது என்று நாம் ஆனந்தத்ததில் வெடித்துப் போகும்போது ஜப்பான்காரன் தன் சாதனைகளை உலகம் வியப்பதைக் கண்டு பூரிக்கமாட்டானா என்ன? ஆனால், நீங்கள் ரொம்பவும் மிகையாகப் புகழ்கிறீர்கள். என்று யோஷிகி அடிக்கடி வெட்கப்பட்டுக் கொண்டிருந்தார். ஜப்பானே வெட்கப்படுவது போலிருந்தது.

அன்று முழுவதும் கியோத்தோவைச் சுற்றினோம். நாராவுக்குப் போனோம். பௌத்தக் கோயில்கள், ஷிண்டோ ஆலயங்கள், எல்லாவற்றையும் சுற்றினோம். ஓர் இடம் மிச்சம் வைக்கவில்லை என்றுதான் தோன்றிற்று எதைப் பார்த்தாலும் 'எப்படி, பிடிக்கிறதா?' என்று கேட்பார் யோஷிகி.

"ரொம்ப நன்றாக இருக்கிறது."

"ரொம்ப நன்றி."

யோஷிகிக்குச் சிரிக்கச் சிரிக்கப் பேசவும் தெரியும். சிற்றுண்டிக் கடைக்குப் போனால் "அனோ...ஓ...ஓ"என்று ஆரம்பித்து ஏதேதோ சொல்லுவார். பரிமாறுகிற பெண் குப்பென்று சிரிப்பாள். கடைக்காரர் சிரிப்பார். இவரும் சிரிப்பார். அப்புறம் மொழிபெயர்த்து எனக்குச் சொல்லுவார். அவருடைய நகைச்சுவை அசட்டுப் பிசட்டு ரகமல்ல. குப்புறத் தள்ளி வயிற்றைக் கிழிக்காது. சிரித்தவுடனேயே அடங்கிவிடுகிற ஹாஸ்யம்தான்!

யோஷிகி கார் கொண்டுவந்திருந்ததால் வேகமாக எல்லா இடங்களையும் பார்க்க முடிந்தது - தொழிற்சாலைகள், கோவில்கள், நாடக அரங்குகள், நடன அரங்குகள், மாளிகைகள், கடைகள், மல்யுத்தம் - இப்படி ஒரு பட்டியலாகப் பார்த்து முடித்தோம். நடுநடுவே ஒரு கடையில் நின்று போன் செய்வார் யோஷிகி. வியாபாரி என்னென்ன காரியங்களை எனக்காக விட்டு வந்திருக்கிறாரோ! ஒரு மணிக்கு ஒரு முறை கூப்பிட்டு விசாரிப்பார். சில சமயம் ஐந்து நிமிஷங்கள் தாமதமாகும் ஆள் கிடைக்க, பேச்சு முடிந்ததும் என்னைப் பார்த்து "ஸாரி, மன்னிக்க வேண்டும்" என்று சிரிப்பார்.

"பரவாயில்லை. நான் உல்லாச யாத்திரைக்கு வந்தவன். ஒன்றும் குடி முழுகிப் போகவில்லை. எனக்காகக் கவலைப்படாதீர்கள்" என்று நானும் சொல்லிக்கொண்டே வந்தேன்.

ஹோட்டலுக்குத் திரும்புகிறபோது இரவு மணி ஒன்பதரை.

"எங்கெல்லாமோ உங்களை இழுத்து அலைக்கழித்திருக்கிறேன். ரொம்பவும் களைத்துப் போயிருப்பீர்கள்" என்று ஆறுதல் கூறினார் யோஷிகி.

"ஒரு களைப்புமில்லை. உட்காருங்கள்" என்றேன். உட்கார்ந்தார்.

"குருமூர்த்தியிடம் சொல்லுங்கள். இந்தியாவுக்குப் போனதும், நான் ரொம்பவும் விசாரித்தேன் என்று. நான் ஒரு நாள்தான் உங்களோடு கழிக்க முடிந்தது. அதற்காகவும் அவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்....நான் மதராஸ் வந்தபோது ரொம்பவும்

உதவியாக இருந்தார் அவர். சினிமா ஸ்ட்டூடியோக்கள், மகாபலிபுரம், காஞ்சிபுரம் என்று பல இடங்களுக்கு அழைத்துப் போனார்...ஓகோ, ஜப்பானியக் கதைகள் கூடப் படிக்கிறீர்களா?" என்று கட்டிலில் கிடந்த புத்தகங்களை எடுத்தார் யோஷிகி.

"ஆமாம். ஹிரோமி கொடுத்தாள்."

"ஹிரோமி?"

"ஆமாம். இங்கே காலையில் இருந்தாளே ஹோட்டல் சிப்பந்தி."

"ஓ! அவளா? ம்.....படித்தீர்களா?"

"பாதி படித்தேன். உங்கள் சித்திரம். பேச்சு இவற்றைப் போலவே இந்தக் கதைகளும் நளினமாக இருக்கின்றன. மூங்கில் இலை மாதிரி ஓர் எளிமை. ஒரு கருக்கு. ஓர் ஆடம்பரமில்லாத அழகு."

புத்தகங்களைப் பிரித்துப் பார்த்தார் அவர். "முன்பெல்லாம் படிப்பதுண்டு. இப்போது வியாபாரத்தைக் கவனிப்பதற்கே பொழுது சரியாக இருக்கிறது...இது எப்படி இருக்கிறது?"

"அதுதான் சொன்னேனே. ரொம்ப நன்றாக இருக்கிறது. இந்தக் கட்டுரை மிக மிகப் பிடித்திருக்கிறது எனக்கு. ஜப்பானியர்களுக்குக் கோபமே வராதாம். வந்தாலும் தாறுமாறாகக் கத்த மாட்டார்களாம்."

யோஷகி சிரித்தார். "ஜப்பானிய மக்கள் பொறுமைசாலிகள்" என்றார். பிறகு தொடர்ந்து பேசினார்.

"உங்கள் நாட்டு யோகம் பற்றிக் கொஞ்சம் படித்திருக்கிறேன். யோகம் என்றால் எது வந்தாலும் ஒரே நிலையில் மனத்தை வைத்திருப்பது இல்லையா? துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் மனம் ஆடக் கூடாது. பொங்கி வழியவும் வேண்டாம். சோர்ந்து மடியவும் வேண்டாம்."

"அதற்காகச் செத்தால்கூடச் சிரிக்க முடியுமா?"

"அழுது மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது?"

"இப்படி இருந்தால் பைத்தியமல்லவா பிடித்துவிடும்?"

"அழுகிற பைத்தியத்தைவிடச் சிரிக்கிற பைத்தியம் பார்க்க அழகாகத்தானே இருக்கும்? என்று யோஷிகி சிரித்தார்.

ஹிரோமி வந்தாள். "ஏதாவது சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டாள்.

நான் பால் கேட்டேன். யோஷிகி பீர் கேட்டார். "வேறு ஏதாவது வேண்டுமா?"

பதில் சொல்வதற்குள் போன் மணி அடித்தது. ஹிரோமி எழுந்தாள். ஹை....சொத்தோ... உங்களுக்குத்தான்" என்று யோஷிகியிடம் 'வாங்கி'யை நீட்டினாள்.

“வேறு ஒன்றும் வேண்டாம்“ என்றேன் நான்.

ஹிரோமி வெளியே போனாள்.

யோஷிகி போனில் பேசினார். பேச்சு முடிந்ததும் வாங்கியை வைத்துவிட்டு ஐந்தாறு விநாடிகள் சும்மா இருந்தார். கைக் கடிகாரத்தைப் பார்த்தார்.

“என்ன, மணியைப் பார்க்கிறீர்கள்?”

“மணி பத்தாகிவிட்டது. புறப்பட வேண்டும்.”

“பீரைச் சாப்பிட்டுப் போகலாம்.”

உட்கார்ந்து நிதானமாகப் பீரைச் சுவைக்கிறவர் நிமிஷத்தில் முடித்துவிட்டார்.

ஹிரோமியிடம் பாதிப் பாட்டிலைக் காட்டி, “சாப்பிடுகிறாயா?” என்று கேட்டார்.

நன்றி கூறிவிட்டு அவளும் சாப்பிடத் தொடங்கினாள். ஜப்பானிய மொழியில் ஒரு ஐந்து நிமிஷம் அவளோடு பேசினார்.

“ஸோ, தெஸ்னே!” என்று அவள் நடுநடுவே கூறிக்கொண்டிருந்தாள். அதற்கு “ஓகோ! அப்படியா!” என்று அர்த்தம் போலிருக்கிறது.

அவள் குடித்து முடிக்கிற வரையில் காத்திருந்து “அப்ப?” என்று புன்முறுவல் செய்தார் யோஷிகி.

“நான் விடை பெறலாமா?”

“ரொம்ப நன்றி. உங்களோடு மிகவும் உபயோகமாகப் பொழுது போயிற்று. உங்கள் உதவியை மறக்கவே முடியாது”

“குருமூர்த்தியிடம் சொல்லுங்கள்” என்று எழுந்தார் அவர்.

“இந்தியாவுக்கு எப்பொழுது மறுபடியும் வருவீர்கள்?” என்று கேட்டேன்.

புறப்படுமுன் கோட் பையில் கையை விட்டு ஒரு முத்துப் பதித்த தங்கக் கழுத்துப்பட்டி கிளிப் ஒன்றை என் கழுத்துப் பட்டியில் மாட்டினார்.

“அடடே, என்ன இது?”

“இருக்கட்டும். என் ஞாபகம்“ என்று எழுந்தார். ஹிரோமியிடம் நின்று சொல்லிக் கொண்டார். அவர்கள் பாணியில் குனிந்து வணங்கினார். ஹிரோமி அவருக்குக் கதவைத் திறந்து விட்டு, லிப்டில் அவரோடு இறங்கிப்போய் வாசல்வரை கொண்டு விட்டு வந்தாள். வந்ததும் சொன்னாள், “அவருக்கு ரொம்ப வருத்தம். உங்களோடு நாளைக்கும் இருக்க முடியவில்லையே என்று. மறுபடியும் மன்னிக்குமாறு என்னைக் கேட்டுக்கொள்ளச் சொன்னார். நீயாவது ஒரு நாள் லீவு எடுத்துக்கொண்டு அவரை இன்னும் பார்க்காத இடங்களுக்கு அழைத்துப் போயேன் என்றார்.”

“நீ என்ன சொன்னாய்?”

“நாளைக்கு லீவு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. எனக்கு நாளைக்கு விடுமுறை நாள்தான் என்றேன்.”

“ரொம்ப நல்லதாயிற்று.”

மறுநாள் ஹிரோமியோடு பட்டு நெசவு, பட்டுக் கண்காட்சிகளையெல்லாம் சுற்ற முடிந்தது.

ஊருக்குக் கிளம்பியபோது, “நான் ஸ்டேஷன் வரையில் வரலாமா?” என்று கேட்டாள் ஹிரோமி.

“நிச்சயமாக.”

ஸ்டேஷன் போன பிறகுதான் ஞாபகம் வந்தது. தோல் பையைப் பிரித்து ஹிரோமியின் புத்தகங்கள் இரண்டையும் எடுத்துக் கொடுத்தேன்.

“அது உங்களுக்குத்தான்” என்றாள் ஹிரோமி.

“அப்படியா? ரொம்ப நன்றி. உன் ஞாபகமாக இருக்கட்டும்.”

“அது மட்டுமில்லை. இந்த உலகத்தில் எல்லாம் தற்செயலாகத்தான் நடக்கிறது. காரண காரியமே கிடையாது என்று என் சிநேகிதன் சொல்லுகிற வழக்கம். அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. நான் அதை நம்புகிறதே இல்லை. ஏனென்றால் கடவுளைக்கூட நம்ப முடியாது போய்விடும். அவன் சொல்வதை நம்பத் தொடங்கினால் ஆனால் இந்த ஒரு சம்பவம் மட்டும் அவன் சொன்னதைச் சரியென்று நிரூபித்துவிட்டது” என்றாள் ஹிரோமி.

“எந்தச் சம்பவம்?”

“நீங்கள் வந்தது, நான் இந்தப் புத்தகம் கொடுத்தது, யோஷிகி வந்தது. எல்லாம்தான்” என்றாள் அவள்.

“எனக்குப் புரியவில்லையே!”

“யோஷிகி பழைய பசலி. இல்லாவிட்டால் மனிதன் மாதிரி நடந்துகொண்டிருப்பார். இப்படி ஜப்பான்காரராக நடந்து கொண்டிருக்க மாட்டார்” என்றாள் அவள்.

“அப்படியென்றால்?”

நீங்கள் வந்த அன்று நாலு மணிக்கு ஹோட்டலுக்கு வந்து உங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தாராமே.”

“ஆமாம். வரமுடியவில்லையாம்!

“எப்படி வர முடியும்? முதல் நாள் கோபேயில் உள்ள அவருடைய கடை எரிந்து சாம்பலாகிவிட்டது.”

“என்னது!”

“ஆமாம். கோபே நகரில் அவருக்குக் கிளைக் கடை ஒன்று உண்டு. மின்சாரக் கோளாறினால் தீப்பற்றி, கடையே எரிந்து கருகிவிட்டது. கிட்டத்தட்ட இருபதாயிரம் டாலருக்கு மேல் நஷ்டம். அவருடைய தம்பித் தீப்பட்டு மேலெல்லாம் காயமாம். ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதாகிவிட்டது.”

“என்னது! ஒன்றுமே சொல்லவில்லையே அவர் என்னோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டு ஊரெல்லாம் சுற்றினாரே!”

“எத்தனையோ தூரத்திலிருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்தச் சேதியைச் சொல்லி உங்களை நோகச் செய்வானேன் என்று இருந்துவிட்டார். அதனால்தான் சொன்னேன். அவர் பழைய காலத்து ஜப்பானியராக நடந்துகொண்டு விட்டார் என்று. இப்போதெல்லாம் அப்படித் துக்கத்தை மென்று விழுங்கும் வழக்கம் போய்விட்டது. துக்கமாயிருந்தால் கொஞ் சமாவது அழுது தீர்த்துவிடக் கற்றுக்கொண்டு விட்டார்கள். சந்தோஷம் வந்தாலும் சிரித்துத் தீர்த்துவிடுகிறார்கள்.”

“சரி, யோஷிகி கடைத் தீயைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?”

“அவர்தான் சொன்னார். அவர் உங்களிடம் விடைபெற்றுப் போகும் முன் போன் வந்ததில்லையா? அப்போது அவர் தம்பிக்கு உடம்பு அதிகமாக இருப்பதாகச் செய்தி வந்தது. இன்னும் இரண்டு மூன்று மணி நேரம்கூடத் தாங்காது என்று அவர் மனைவி அவசரமாக அவரைக் கூப்பிட்டனுப்பினாள். பிரக்ஞை தப்பிவிட்டதாம். எத்தனையோ வைத்தியம் செய்தும் பயனில்லையாம். ஏகச் செலவு செய்து பெரிய டாக்டர்கள் கூடப் பார்த்தார்களாம்.”

“ஆ!” எனக்கு மூளை நின்றுவிட்டது போலிருந்தது. அ!அ! இதைத் தவிர வேறு பேச நாக்கு பயன்படவில்லை.

“பிரக்ஞை தப்பிவிட்டது என்று தெரிந்த பிறகுதான் இவருக்குத் துக்கம் தாங்கவில்லை. அதுவரை எப்படியோ தாங்கிக் கொண்டுவிட்டார். இனிமேல் ஒரு வார்த்தைகூட அவன் பேச மாட்டான் என்றார் என்னிடம், அதைச் சொல்லும் போது அவர் நெஞ்சு தழுதழுத்துவிட்டது. கடைசியில் இதைப் பற்றியெல்லாம் உங்களிடம் பிரஸ்தாபிக்கவே கூடாது என்று வேறு என்னை எச்சரித்துவிட்டுப் போனார். ஆனால் எனக்கு எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்? இவ்வளவு தூரத்திலிருந்து வந்த ஒரு நல்ல நண்பரிடம்கூடத் தம் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத் தவறி விட்டாரே, பாவி மனுஷன். இவர்களெல்லாம் மனுஷனாக இருக்கக் கூடாதோ?” என்று தூரத்துக் குன்றுகளைப் பார்த்தாள் அவள்.

என்னால் தாங்க முடியவில்லை. தீச்சுட்ட புண்ணோடு, நினைவிழந்த இளம் உடல் என் கண்ணை மறைத்தது.

வண்டி வர இருபது நிமிஷம் இருந்தது. நான் பேசவில்லை. ஹிரோமியும் பேசவில்லை.

வண்டி வந்து ஏறும்போது, “கடைசி நேரத்தில் நானும் உங்களைக் கஷ்டப்

படுத்திவிட்டேன்” என்று ஓர் இரக்கப் புன்னகையுடன் ஹிரோமியின் குரல் தணிந்து ஒலித்தது.

“நீயும் ஜப்பான்காரியாகத்தான் இருக்கிறாய்” என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

வண்டி இரண்டு நிமிஷம்தான் நின்றது. புறப்பட்டது. நூறு மைல் போய்த்தான் அடுத்த ஸ்டேஷன், வேகமும் மணிக்கு நூற்று நாற்பது மைல். இந்த ஹிக்காரி எக்ஸ்பிரஸ் உலகமே இதுவரை சாதிக்காத சாதனை. ஆடாமல் அசங்காமல் பைன் மரங்களுக்கிடையே கனவுபோல் விரைகிறது.

ஜப்பானியர்களின் எத்தனையோ சாதனைகளில் இந்த ரயிலும் ஒன்று. அவர்களுடைய புன்சிரிப்பைப்போல ஆடாமல் அசங்காமல் சீறிச் செல்கிறது.

## பயிற்சி

### I. ஒரு வரியில் விடையளி :-

1. யோஷிகி சென்னைக்கு வந்த பொழுது யாருடைய வீட்டில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்?
2. ஹிபியா பார்க்கில் மத்தியானம் ஆபிஸ் இடைவேளையில் எவ்வளவு பேர் டிபன் சாப்பிடுவார்கள்?
3. யோஷிகி வெட்கப்படுவது எப்படி இருந்ததென்று கதையாசிரியர் தி. ஜானகிராமன் கூறுகின்றார்.
4. ஜப்பானிய மக்கள் பொறுமைசாலிகள் என்று கூறியது யார்?
5. யோஷிகி சிறுகதையில், ‘எனக்கு நாளைக்கு விடுமுறை நாள்தான் என்று கூறியது யார்?
6. யோஷிகி சிறுகதையில் கோபேயில் யாருடைய கடை எரிந்து சாம்பலாகியது?
7. யோஷிகி சிறுகதையில் மணிக்கு நூற்று நாற்பதுமைல் வேகத்தில் செல்லும் ரெயிலின் பெயர் என்ன?

### II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. குருமூர்த்தி, ஜானகிராமனிடம் கொடுத்தனுப்பிய விலாசங்களைப் பற்றி எழுதுக.
2. ஜப்பான் மொழி பேசுவீர்களா என்று கேட்ட ஹோட்டல் பணிப்பெண்ணுக்கு கதையாசிரியர் கூறிய பதிலை எழுதுக.
3. யோஷகியைப் பற்றி ஜானகிராமன் கூறியவை யாவை?
4. யோஷிகியின் நகைச்சுவையைப் பற்றி எழுதுக.

5. யோஷிகி சென்னை வந்திருந்த பொழுது அவரை, குருமூர்த்தி எந்தெந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றார்?

6. புத்தகங்களைப் படித்தீர்களா என்று கேட்ட யோஷிகிக்குக் கதையாசிரியர் கூறிய பதிலை எழுதுக.

7. கோபே நகரில் யோஷிகியின் கடை தீப்பற்றி எரிந்ததைப் பற்றி ஹோட்டல் பணிப்பெண் ஜானகிராமனுக்குக் கூறிய செய்திகளை எழுதுக.

## III. ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. 'இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன்' என்று ஜானகிராமன் கூறியதும் ஹோட்டல் பணியாள் கூறியவற்றை விவரி.

2. ஜப்பான் பிடித்திருக்கிறதா என்று கேட்ட யோஷிகிக்குக் கதையாசிரியர் கூறியவற்றை எழுதுக.

3. எந்தெந்த விசயங்களை ஜானகிராமனிடம் பேசக் கூடாதென்று யோஷிகி, ஹோட்டல் பணிப்பெண்ணிடம் கூறியிருந்தார்?

## IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-

1. "வருத்தப் படாதே, பிஸ்கத்தும் இரண்டு காப்பியும் கொண்டா"

2. "உங்கள் மக்களுக்குத்தான் என்ன சுத்தம்! என்ன கட்டுப்பாடு! என்ன கலை உணர்ச்சி. காரியங்கள் செய்வதில்தான் என்ன சுருக்கு".

3. "அழுது மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது"

4. "நீங்கள் வந்தது நான் இந்தப் புத்தகம் கொடுத்தது, யோஷிகி வந்தது எல்லாம்தான்"


5. "அதனால்தான் சொன்னேன். அவர் பழைய காலத்து ஜப்பானியராக நடந்து கொண்டுவிட்டார்".

6. "நீயும் ஜப்பான் காரியாகத்தான் இருக்கிறாய்" என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

**குறிப்பு :**

உன் வாழ்க்கை அனுபவத்தில் கண்ட 'விருந்தோம்பல்' பற்றிச் 'சிறுகதை' எழுதுக.

# 2. சிற்பியின் நரகம்



- புதுமைப் பித்தன்

சூரியாஸ்தமன சமயம். காவேரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் என்றையும் விட அதிக நெருக்கடி. கறுத்து ஒடுங்கிய மிசிர தேச வாசிகளும், வெளுத்து ஒடுங்கிய கடாரவாசிகளும், தசை வலிமையின் இலட்சியம் போன்ற கறுத்த காப்பிரிகளும், வெளுத்த யவனர்களும் தென்னாட்டுத் தமிழும், வடநாட்டுப் பிராகிருதமும் - எல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் குழம்பின. சுங்க உத்தியோகஸ்தர்கள் அன்னம் போலும், முதலைகள் போலும் மிதக்கும் நாவாய்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களையும் வேலைக்காரர்களையும் பொற் பிரம்பின் சமயோசிதப் பிரயோகத்தால் தணிக்கை செய்து கொண்டிருந்தனர். அரசனுக்குக் கடாரத்திலிருந்து வெள்ளை யானைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கத்தான் என்றுமில்லாத கூட்டம்!

அஸ்தமன சூரியனின் ஒளியே எப்பொழுதும் ஒரு சோக நாடகம். கோவில் சிகரங்களிலும் மாளிகைக் கலசங்களிலும் தாக்கிக் கண்களைப் பறிப்பது மட்டுமல்லாது, கடற்கரையில் கரும்பாறையில் நிற்கும் துவஜஸ்தம்பத்தின் மீது கீழ்த்திசை நோக்கிப் பாயும் பாவனையில் அமைக்கப்பட்ட பொன்முலாம் பூசிய வெண்கலப் புலியின் முதுகிலும் வாலிலும் பிரதிபலிப்பது அவ்விடத்திற்கே ஒரு மயக்கத்தைக் கொடுத்தது.

இந்திர விழாவின் சமயத்தில் மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட ஸ்நானக் கட்டத்தின் படிக்கட்டில், பைலார்க்கஸ் என்ற யவனன் கடலை நோக்கியபடி உட்கார்ந்திருந்தான். நீண்ட போர்வையான அவனது டோகா காற்றில் அசைந்து படபடவென்றடித்து, சில சமயம் அவனது தாடியையும் கழுத்துடன் இறுகப்பின்னியது. பெரிய அலைகள் சமயா சமயங்களில் அவனது பின்னிய தோல் வார்ப் பாதரட்சையை நனைத்தன. அவ்வளவிற்கும் அவன் தேகத்தில் சிறிதாவது சலனம் கிடையாது. மனம் ஒன்றில் லயித்துவிட்டால் காற்றுதான் என்ன செய்ய முடியும், அலைதான் என்ன செய்ய முடியும்?

பைலார்க்கஸின் சிந்தனை சில சமயம் அலைகளைப் போல் குவிந்து விழுந்து சிதறின. கனவுகள் அவனை வெறியனைப்போல் விழிக்கச் செய்தன.

திடீரென்று, "சிவா" என்ற குரல். ஒரு தமிழ்நாட்டுப் பரதேசி!

"யவனரே! உமது சித்தம் உமக்குப் பிரியமான ஒன்றுமற்ற பாழ்வெளியில் லயித்ததோ! நான் நேற்றுச் சொன்னது உமக்குப் பதிந்ததா? எல்லாம் மூலசக்தியின் திருவிளையாடல், அதன் உருவம்! கொல்லிப் பாவையும் அதுதான்; குமரக் கடவுளும் அதுதான்! எல்லாம் ஒன்றில் லயித்தால்.

"உமது தத்துவத்திற்குப் பதில் ஒரு கிண்ணம் திராட்சை மது எவ்வளவோ மேலானது. அதுவும் சைப்பிரஸ் தீவின் திராட்சை-அதோ போகிறானே, அந்த காப்பிரியும் ஏதோ கனவை நம்புகிறான். உமது முதல் சூத்திரத்தை ஒப்புக்கொண்டால், உமது கட்டுக் கோப்பில் தவறு

கிடையாதுதான். அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? ஒவ்வொருவனுடைய மனப் பிராந்திக்கும் தகுந்தபடி தத்துவம் - எனக்கு அது வேண்டாம் - நாளங்காடியில் திரியும் உங்கள் கருநாடிய நங்கையும் மதுக்கிண்ணமும் போதும் -"

"சிவ! சிவ!" இந்த ஜைனப் பிசாசுகள்கூடத் தேவலை. கபாலி வெறியர்கள் கூடத் தேவலை. உம்மை யார் இந்த அசட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு யவனத்திலிருந்து வரச்சொன்னது?"

"உம்மைப் போன்றவர்கள் இருக்குமிடத்தில் நான் இருந்தால்தான் அர்த்தமுண்டு. எங்கள் ஜூபிட்டரின் அசட்டுத்தனத்திற்கும் உங்கள் கந்தனின் அசட்டுத்தனத்திற்கும் ஏற்றத் தாழ்வில்லை-" என்று சிரித்தான் பைலார்க்கஸ்.

"சிவ! உம்மிடம் பாசத்தை வைத்தான், அதுவும் அவன் விளையாட்டுத்தான்" என்று தம் சம்புடத்திலிருந்த விபூதியை நெற்றியில் துலாம்பரமாக அணிந்துகொண்டார் பரதேசி.

"நாளங்காடிப் பக்கம் போகிறேன், வருகிறீரா?" என்றார் மீண்டும் அச்சந்நியாசி.

"ஆமாம்! அங்கே போனாலும் சாத்தனைப் பார்க்கலாம். அவனிடம் பேசுவதில் அர்த்தமுண்டு. அவனுக்குத் தெரியும் சிருஷ்டி ரகசியம்....."

"ஓஹோ! அந்தச் சிலை செய்கிற கிழவனையா? உமக்கு ஏற்ற பைத்தியக்காரன்தான்-ஏதேது! அவனே வருகிறானே" என்றார் சாமியார்.

பைலார்க்கஸ் எழுந்து அவனை யவன முறையில் வணங்கினான்.

சாத்தனுக்கு எண்பது வயதிருக்கும்; தொண்டு கிழவன். ஆனால் வலிமை குன்றவில்லை. கண்களின் தீட்சண்யம் போகவில்லை. பிரமன் மனித வடிவம் பெற்றதுபோல் காணப்பட்டான். அவனும் கைகூப்பி வணங்கி "பைலார்க்கஸ், உன்னைத்தான் தேடிவந்தேன்! வீட்டிற்கு வருகிறாயா? எனது லட்சியம் இன்றுதான் வடிவம் பெற்றது...." என்று ஒரு குழந்தையின் உற்சாகத்துடன் கூவியழைத்தான்.

"இவரைத் தெரியுமா? பாண்டிய நாட்டு, உங்கள் பரதேசி-அவர் தத்துவங்களை எல்லாம் என்னுள் திணித்துப் பார்த்தார்......பைலார்க்கஸிடம் முடியுமா?" என்று கேலியாகச் சிரித்தான் யவனன்.

"சுவாமி வரணும், இன்று என் குடிசையில் அமுதுபடி கழிக்க வேண்டும்" என்று பரதேசியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் சாத்தன்.

"என்ன, என்ன! நீயுமா?" என்றான் பைலார்க்கஸ்.

"பைலார்க்கஸ்! நீ நிரீசுவரவாதியாக இருப்பதில் எனக்கு வருத்தமில்லை. மற்றவரைக் கேலி செய்யாதே....."

"அதற்குத்தான் நான் பிறந்திருக்கிறேன். அப்பா! எனது வேலை அது....."

“சரி, வாருங்கள் போகலாம். சுவாமி வரணும்!” என்று இருவரையும் இரட்டை மாட்டு வண்டிக்கு அழைத்துச் சென்றான் சிற்பி.

வண்டியின் கதி மெதுவாகத்தான் இருக்க முடிந்தது. எதிரே யானைகளும், பொதி கழுதை, பொதி மாடுகளும் துறைமுகத்தை நோக்கி வரும் நேரத்தில் தீப்பந்தம் பிடித்துச் செல்லும் மக்களை விலக்கிக் கொண்டு வண்டி செல்வது கடினந்தான். திடீரென்று, அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ரதம், யானை வந்துவிட்டால் தெருவே தூளிபடும் முரசொலி இருந்து என்ன பயன்? அந்த உப்புவண்டி ஓட்டிச்செல்லும் பெண் சிறிது தவறினால் ரதத்தின் அடியில்தான்! சாத்தனின் வண்டி அதில் முட்டிக் கொள்ளவிருந்தது.

“தெய்வச்செயல்!” என்றான் சாத்தன்.

“உன் சிருஷ்டி சக்தி” என்றான் பைலார்க்கஸ். வேறு எதையோ நினைத்துக்கொண்டு.

“பைலார்க்கஸ், உனது பேச்சு எனது பெருமையைச் சாந்தி செய்யலாம். நான் எத்தனை நாள் கஷ்டப்பட்டேன்! அது உனக்குத் தெரியுமா? நீ நேற்றுப் பிறந்தவன்--கூத்து! .. அதில் எவ்வளவு அர்த்தம்! மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம், தெரிய வேண்டுவதெல்லாம் - இந்தப் பிரபஞ்சமே, பைலார்க்கஸ், நீ நினைப்பதுபோல் வெறும் பாழ் வெளியன்று; அர்த்தமற்ற பேய்க்குழப்பம் அன்று....இருபது வயசிருக்கும்; அப்போ ஒரு தரம் பாண்டிய நாட்டுக்குப் போயிருந்தேன்.....சிற்பத்தைப் பார்க்க வேண்டுமானால் கொல்லிப் பாவையைப் பார்க்க வேண்டும். அங்கேதான்,ஒரு மறவன், நாகன், ஒரு கூத்தில் அபிநயம் பிடித்தான். அந்தக் கால் வளைவு, அதை அதிலே பிடித்தேன்..... உலகத்தின் அர்த்தத்தை-ஒவ்வொன்றாக, படிப்படியாக வளர்ந்தது-அந்த மலையத்து நடிகைதான் முகத்தின் சாந்தியை, அந்த அபூர்வமான புன்சிரிப்பை, அர்த்தமற்ற அர்த்தத்தை - பைலார்க்கஸ், உனக்கென்ன! நீ கேலிக்காரன் - உபநிஷதத்தில் தேடியலைந்தேன் - இமயத்தில் தேடியலைந்தேன்..... சாந்தி அந்த இரவு - என் மனைவி அங்கயற்கண்ணி இறந்த அன்று கிட்டியது - பிறகு வெண்கலக் கலப்பிற்கு என்ன பரீட்சை! என்ன ஏமாற்றம்! ஆசைதான் வழிகாட்டியது. அந்த ரூப சௌந்தர்யம் பெறுவதற்கு எத்தனை ஆட்களைத் தேடினேன்! ... அதன் ஒரு சாயை..... நீலமலைக் கொடுங்கோலன் - பத்து வருஷங்களுக்கு முன்பு சிரச்சேதம் செய்யப்பட்டானே - அவனுடைய இடை துவளுதலில் கண்டேன் ... தெய்வம் ஒன்று உண்டு - அதன் அர்த்தத்தை என் சிலை உணர்த்த முடிந்தது எனது பூர்வ ஜென்ம பலன் - இந்தக் கைகளால் பின்னாலிருந்து ஒரு அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால் ... அதைச் சாதிக்க முடியும்?”

“நீதான் சாதித்தாய்! நீதான் பிரம்மா! உன் சாதனைதான் அது. சிருஷ்டி! மயங்காதே! பயப்படாதே! நீதான் பிரம்மா! சிருஷ்டித்தெய்வம்!” என்று பைலார்க்கஸ் அடுக்கிக் கொண்டே போனான்.

சாமியார் புன்சிரிப்புடன் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்

வண்டியும் நாளங்காடியை அடைந்து, கீழ்ச் சதுக்கத்தின் வழியாக ஒரு சந்தில் திரும்பி, ஒரு வீட்டின் முன்பு நின்றது.

மூவரும் இறங்கி வாசற்படியில் ஏறினர். ஒரு யவனப் பெண் வந்து காலைக் கழுவினாள். ஒரு காப்பிரி, மரியாதையாகக் குனிந்து, கலிங்க வஸ்திரத்தினால் துடைத்தான்.

"சுவாமி, வரவேண்டும்! பைலார்க்கஸ், இப்படி வா!" என்று இருவரையும் அழைத்துக் கொண்டு ஓர் அறைக்குள் சென்றான் சாத்தன் - அவன் வயதிற்கு அவ்வளவு துடிதுடிப்பு ஆச்சரியமானதுதான்!

"மூபாங்கோ, தீபம்!" என்று கத்தினான். அந்த காப்பிரி ஒரு கைவிளக்கை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஜன்னல் இல்லாத அந்த அறையிலும் காற்று நூலிழை போல் வந்து உள்ளத்தையும் உடலையும் மயக்கியது.

"இங்கு கூடவா விளக்கு இல்லை! திரையை ஒதுக்கு! ஸ்வாமி, பைலார்க்கஸ், இதுதான் என் வாழ்க்கை!" என்று திரையை ஒதுக்கினான்.

இருவரும் ஸ்தம்பித்து நின்றனர். அந்த மங்கிய தீபவொளியில், ஒற்றைக் காலைத் தூக்கி நடிக்கும் பாவனையில், ஆள் உயரத்தில் மனித விக்ரகம்! விரிந்த சடையும் அதன்மீது விளங்கும் பிறையும், விரிந்து சின்முத்திரைகளைக் காண்பிக்கும் கைகளும், அந்த அதரத்தில் தோன்றிய அபூர்வப் புன்னகையும் மனத்தில் அலைமேல் அலையாகச் சிந்தனைக் கற்பனைகளைக் கிளப்பின. மூவரும் அந்தச் சிலையேயாயினர். சிலையின் ஒவ்வொரு வளைவிலும், ஒவ்வொரு அங்கத்திலும் என்ன ஜீவத் துடி துடிப்பு!

சந்நியாசி, தம்மையறியாமல் பாட ஆரம்பித்தார்...

**பனித்த சடையும், பவளம்போல்**
**மேனியும், பால் வெண்ணீறும்**
**குனித்த புருவமும், கொவ்வைச்**
**செவ்வாயும், குமிண் சிரிப்பும்,**
**இனித்தங்கசிய எடுத்த பொற்**
**பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே**
**இந்த மா நிலத்தே!**

"சுவாமி, அப்படிச் சொல்லக்கூடாது!"

"சாத்தா! அவர் சொல்லுவதுதான் சரி! இது கலையா! இது சிருஷ்டி! இதை என்ன செய்யப்போகிறாய்?"

"அரசன் கோவிலுக்கு - இதென்ன கேள்வி?"

"என்ன! இந்த அசட்டுத் தனத்தை விட்டுத்தள்ளு - அரசனுடைய அந்தப்புர நிர்வாண உருவங்களின் பக்கலில் இதை வைத்தாலும் அர்த்தம் உண்டு - இதை உடைத்துக் குன்றின்மேல் எறிந்தாலும் அந்தத் துண்டுகளுக்கு அர்த்தம் உண்டு; ஜீவன் உண்டு ..." என்று வெறி பிடித்தவன் போல் பேசினான் பைலார்க்கஸ்.

“சீ, பைலார்க்கஸ்! உனது வெறிபிடித்த கொள்கைகளுக்கு யவனந்தான் சரி! அகஸ்தூஸா - அந்த உங்கள் சாம்ராட் - அவனுக்குத்தான் சரி உன் பேத்தல்!”

“சாத்தனாரே! உமது இலட்சியத்திற்கு அரசன் கோரிக்கைதான் சரியான முடிவு. இனி ஏன் இந்த ஜைனர்கள் தலைதூக்கப் போகிறார்கள்..!” என்றார் சாமியார்.

“இந்த வெறிபிடித்த மனிதர்களை விட அந்தக் கடலுக்கு எவ்வளவோ புத்தியிருக்கிறது ...” என்று கோபித்துக்கொண்டு பைலார்க்கஸ் வெளியேறிவிட்டான்.

அன்றுதான் கும்பாபிஷேகம். சிலையைப் பிரதிஷ்டை செய்த தினம். சோழ தேசத்திலேயே அது ஒரு பெரும் களியாட்டம் என்று கூற வேண்டும். சாத்தனுக்கு இலட்சியம் நிறைவேறிற்று. அன்று பைலார்க்கஸ் தனது குதூகலத்தில் பங்கெடுத்துக்கொள்ள உயிருடன் இல்லையே என்ற வருத்தம் சாத்தனுக்கு அதிகம்.

புதிய கோவிலிலிருந்து வீடு சேரும்பொழுது அர்த்தஜாமமாகி விட்டது.

வயதின் முதிர்ச்சி அன்றுதான் அவனைச் சிறிது தளர்த்தியது. சோர்ந்து படுத்தான். அயர்ந்துவிட்டான்.

அப்பா! என்ன ஜோதி! அகண்டமான எல்லையற்ற வெளி! அதிலே சாத்தனின் இலட்சியம். அந்த அர்த்தமற்ற, ஆனால் அர்த்தபுஷ்டி மிகுந்த, ஒரு புன்சிரிப்பு! மெதுவான ஹிருதய தாளத்தில் நடனம்! என்ன ஜீவன்! என்ன சிருஷ்டி!

திடீரென்று எல்லாம் இருண்டது! ஒரே கன்னக்கனிந்த இருள்! ஹிருதய சூனியம் போன்ற பாழ் இருட்டு!

பிறகும் ஒளி ... இப்பொழுது தங்கத்தினாலான கோவில்! கண்கள் கூசும்படியான பிரகாசம்! ...கதவுகள் மணியோசையுடன் தாமே திறக்கின்றன ... உள்ளே அந்தப் பழைய இருள்!

சாத்தன் உள்ளே செல்லுகிறான். இருட்டின் கரு போன்ற இடம். அதில் மங்கிய தீபவொளி தோன்றுகிறது! என்ன இதுவா பழைய சிலை!

உயிரில்லை! கவர்ச்சிக்கும் புன்னகையில்லையே! ... எல்லாம் மருள் .. மருள்..!

அந்தகார வாசலில் சாயைகள் போல் உருவங்கள் குனிந்தபடி வணங்குகின்றன.

“எனக்கு மோட்சம்! எனக்கு மோட்சம்!” என்ற எதிரொலிப்பு. அந்தக் கோடிக்கணக்கான சாயைகளின் கூட்டத்தில் ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்கவில்லை! இப்படியே தினமும் ...

நாட்கள், வருஷங்கள், நூற்றாண்டுகள் அலைபோல் புரள்கின்றன. அந்த அனந்த கோடி வருஷங்களில் ஒரு சாயையாவது ஏறிட்டுப் பார்க்க வேண்டுமே!

“எனக்கு மோட்சம் ...!” இதுதான் பல்லவி, பாட்டு, எல்லாம்!

சாத்தன் நிற்கிறான் ....

எத்தனை யுகங்கள்! அவனுக்கு வெறி பிடிக்கிறது. “உயிரற்ற மோட்சச் சிலையே! உன்னை உடைக்கிறேன்! போடு! உடை! ஐயோ, தெய்வமே! உடைய மாட்டாயா! உடைந்துவிடு! நீ உடைந்து போ! அல்லது உன் மழு என்னைக் கொல்லட்டும். அர்த்தமற்ற

கூத்து...!" இடி இடித்தமாதிரி சிலை புரள்கிறது - சாத்தனது ஆலிங்கனத்தில், அவன் ரத்தத்தில் அது தோய்கிறது ... ரத்தம் அவ்வளவு புனிதமா! பழைய புன்னகை! ..

சாத்தன் திடுக்கிட்டு விழித்தான் வெள்ளி முளைத்துவிட்டது. புதிய கோவிலின் சங்க நாதத்துடன் அவனது குழம்பிய உள்ளம் முட்டுகிறது.

"என்ன பேய்க்கனவு, சீ!" என்று விபூதியை நெற்றியில் அணிந்து கொள்கிறான்.

"பைலார்க்கஸ் - பாவம் அவன் இருந்தால் ..." சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை.

## பயிற்சி

### I. ஒரு வரியில் விடை எழுதுக :-

1. சிற்பியின் நரகம் என்னும் சிறுகதையில் அரசனுக்கு யானைகள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது?
2. இந்திரவிழா நடந்த துறைமுகப்பட்டினம் எது?
3. அசட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு யவனத்திலிருந்து வந்தவர் யார்?
4. தத்துவத்தை விட மேலானது எது என்று பைலார்க்கஸ் கூறுகிறார்?
5. சிற்பி சாத்தனின் இலட்சியம் யாது?
6. சிற்பி சாத்தன் யாரின் சிலையை வடித்திருந்தார்?

### II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. புதுமைப்பித்தன் அஸ்தமன சூரியனின் ஒளியை எவ்வாறு காட்சிப் படுத்துகின்றார்?
2. பைலார்க்கஸின் தத்துவமாக சிற்பி கூறுவன யாவை?
3. புதுமைப்பித்தன் சிற்பி சாத்தனின் தோற்றப் பொலிவு பற்றிக் கூறுவன யாவை?

### III. ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. சாத்தன் தான் செய்த சிலையின் வளைவு நெளிவுகளையும் சாயலையும் எவற்றிலிருந்து கண்டுபிடித்தான்?
2. சந்நியாசி மனிதப் பிறவியை வேண்டுவதற்கான காரணங்களாகக் கூறுவன யாவை?
3. சாத்தன் சிலையை உடைக்கக் காரணம் என்ன?

### IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-

1. "எங்கள் ஜுபிட்டரின் அசட்டுத்தனத்திற்கும் உங்கள் கந்தனின் அசட்டுத்தனத்திற்கும் ஏற்றத்தாழ்வில்லை"
2. "இந்தக் கைகளால் பின்னாலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால்"
3. "உமது இலட்சியத்திற்கு அரசன் கோரிக்கைதான் சரியான முடிவு. இனி ஏன் இந்த ஜைனர்கள் தலைதூக்கப் போகிறார்கள்"

**குறிப்பு :**

உன் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை மையமாகக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக.

# 3. சுயநலம்

- விந்தன்



வேலப்பனின் வேலையே அலாதியானது. மனைவி, மக்களை மறந்து நாள்தோறும் உயிரற்ற இயந்திரங்களிடமோ, உணர்ச்சியற்ற அதிகாரிகளிடமோ உயிரைவிட்டுக் கொண்டிருப்பது அவனுடைய வேலையல்ல; அவன் தொழிலுக்கு அவனே வேலைக்காரன். அவனே சொந்தக்காரன்.

காலையில் எழுந்ததும் வேலப்பன் கடை வீதிக்குச் சென்று சில தேக்குமரத் துண்டுகளையும், பிரம்புக் கத்தைகளையும் வாங்கி வருவான். தேக்குமரத் துண்டுகளை அறுத்து, இழைத்து 'கூர்' வாங்கி கட்டில்களாகச் செப்பனிடுவது வேலப்பனின் வேலை. பிரம்புகளை யெல்லாம் பிளந்து கட்டில்களுக்கு 'படுக்கை' பின்னி விடுவது, வேலப்பனின் மனைவியான முருகாயியின் வேலை. நடுநடுவே 'எடுபிடி' வேலைகளுக்கெல்லாம் அவர்களுடைய குழந்தைகள்!

வேலை செய்யும் இடமோ அவர்கள் வீட்டை அடுத்த மாந்தோப்பு 'குக்கூ' குயில்களும், 'கிக்கீ' கிளிகளும் கொஞ்சி விளையாடும் இடம். அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர், வேலப்பன் அங்கு வேலை செய்வதைப் பற்றி ஒன்றுமே சொல்வதில்லை. ஏனென்றால், சம்பளம் இல்லாமல் அவன் தன் வேலையுடன், நம் தோட்டத்தையும் காவல் காத்துக் கொண்டிருக்கட்டுமே என்றுதான்!

வேலைக்கு நடுவே ஊர்ப்பேச்சு, உறவினர் பேச்சு, காதல் பேச்சு, ஊடல் பேச்சு எல்லாம் நடக்கும். ஆனால், கைகள் மட்டும் வேலையிலேயே முனைந்திருக்கும்.

"பிரம்பைப் பிளப்பாள் முருகாயி!<br>
பின்னி விடுவாள் முருகாயி!<br>
கன்னத்தைக் கிள்ளப் போனால்<br>
கையைத் தள்ளுவாள் முருகாயி!

என்று நடுவில் பாட்டு வேறு பாட ஆரம்பித்து விடுவான் வேலப்பன்.

"ஐயே! மூஞ்சைப் பாரு மூஞ்சை!" என்று உள்ளத்தில் விருப்புடனும் உதட்டில் வெறுப்புடனும் அவனைப் பழிப்பாள் முருகாயி.

இதைக்கேட்டு வேலப்பனுக்குக் கொஞ்சமாவது கோபம் வரவேண்டுமே! ஊஹூம். சிரிப்புத்தான் வரும்!

மாலை நேரத்துக்குள் அவர்கள் எப்படியாவது நான்கு கட்டில்கள் செய்து விடுவார்கள். வேலப்பன் இரண்டைத் தூக்கித் தன் தோள்களின் மேல் வைத்துக் கொள்வாள்; முருகாயி இரண்டைத் தூக்கித் தன் தோள்களின் மேல் வைத்துக் கொள்வாள். வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படி குழந்தைகளுக்கு உத்தரவிட்டு விடுவார்கள். "கட்லு, கட்லு! என்று கூவிக்கொண்டே தெருத் தெருவாய்ச் செல்வார்கள்.

இருட்டுவதற்குள் நான்கு கட்டில்களும் விற்றுவிடும். லாபத்தைப் பற்றித் திட்டமாகச் சொல்லமுடியாது; ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கிடைக்கும்; இன்னொரு நாளைக்கு நான்கு ஐந்துகூடக் கிடைக்கும். இந்த லாபத்தைக் கொண்டு, பங்களா, கார், காவற்காரனோடு வாழாவிட்டாலும் அவர்கள் பசியாமல் வாழ்ந்தார்கள்.

மாந்தோப்புக்குச் சொந்தக்காரரான மாதவராயர் வெகு நாட்களாக வேலப்பனின் வேலையைக் கவனித்து வந்தார். ஒருநாள் அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று! அந்த யோசனையுடன் அவர் வேலப்பனை நெருங்கி, "என்ன வேலப்பா! தினசரி வெய்யிலில் இப்படி வியர்க்க விறுவிறுக்க வேலை செய்கிறாயே, உனக்குச் சிரமமாயில்லையா?" என்று கேட்டார்.

"சிரமத்தைப் பார்த்தா ஆகுதுங்களா? வயிறுன்னு ஒண்ணு இருக்கே!" என்றான் வேலப்பன்.

"மவராசாவின் மாந்தோப்பு இருக்கும்போது எங்களை வெய்யில் என்ன செய்யும்?" என்றாள் முருகாயி.

"என்ன இருந்தாலும் மாட்டை மேய்த்தோமா? கோலைப் போட்டோமா? என்று எங்கேயாவது வேலைக்குச் சென்று நாளைக் கழித்துவிட்டு, மாதம் பிறந்தால் ஐம்பது, அறுபது என்று சம்பளம் வாங்கிக் கொண்டு 'ஹாய்'யாகக் குடித்தனம் பண்ணும் சௌகரியம் வருமா? உன்னுடன் உன் மனைவியும் கஷ்டப்பட்டு, மாலை முழுவதும் தெருத் தெருவாய்ச் சுற்றி நீங்கள் அடையும் சுகந்தான் என்ன? வேணுமானால் முருகாயியை ஒரு மாதம் நிழலில் இருக்கச் சொல்லிப் பாரு. அப்புறம் நீ அவளை விட்டு அந்தண்டை இந்தண்டை போகவே முடியாது!" என்று சொல்லி விஷமத்துடன் சிரித்தார் மாதவராயர்.

முருகாயியை வெட்கம் பிடுங்கித் தின்றது அவள், "போங்கசாமி" என்று சொல்லிக் கொண்டே சிரிக்காமல் சிரித்தாள்.

"என்ன பண்றது. சாமி! எனக்கு வேறே வேலை ஒண்ணுந் தெரியாது; இந்தக் கட்டிலைக் கட்டிக் கொண்டு அழத்தான் தெரியும்!" என்றான் வேலப்பன்.

இப்பொழுது தான் மாதவராயருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. "அப்படியானால் நான் ஒன்று சொல்கிறேன்; கேட்கிறாயா?" என்று ஆரம்பித்தார்.

"உங்கள் சொல்லைக் கூட நான் தட்டுவேனுங்களா?"

"சரி நீயும் கொஞ்சம் பணம் போடு; நானும் கொஞ்சம் பணம் போடுகிறேன். இரண்டு பேருமாகச் சேர்ந்து இதே இடத்தில் இந்த மாந்தோப்பை அழித்துவிட்டு ஓர் அழகான கட்டிடம் கட்டலாம். சம்பளத்துக்கு வேண்டிய ஆட்களை வைத்துக் கொள்ளலாம். கட்டில்களை வேண்டிய அளவு உற்பத்தி செய்யலாம். அவைகளுக்கு அழகான வர்ணப் பூச்சு, கண்ணைக் கவரும் 'வார்னிஷ்' வேலையெல்லாம் செய்து, காட்சி அறையில் வரிசைக் கிரமமாக நிறுத்தி வைக்கலாம். விலையை எவ்வளவு கூட்ட முடியுமோ, அவ்வளவு கூட்டிக் கொள்ளலாம். போட்டிக்கு யாரும் வந்து விடாமல் 'நம்மைப்போல் யாரும் கட்டில்கள் செய்யக் கூடாது' என்று சர்க்கார் மூலம் உத்தரவாதம் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிக்கைகளிலும், ரயில்

- டிராம்களிலும் விளம்பரம் செய்யலாம். இந்தியா முழுவதும் ஏஜண்டுகளை நியமித்துக் கட்டில்களை அனுப்பி வைக்கலாம். வேண்டியவர்கள் அங்கங்கே வந்து வாங்கிக் கொள்ளட்டும். கிடைக்கும் லாபத்தை இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம். 'கொள்ளைக்குப் போனாலும் கூட்டு உதவாது' என்று நீ சொல்வதாயிருந்தால் இந்த மாந்தோப்பை நீயே வாங்கிக் கொள். கம்பெனியையும் நீயே வைத்துக்கொள். லாபத்தையும் நீயே அடைந்து கொள். எப்படியாவது நீ சௌகரியமாயிருந்தால் அதுவே எனக்குப் போதும்!" என்று சொல்லி, மாதவராயர் தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். காரணம், 'அவனா நம்முடன் பணம் போடப் போகிறான்?" என்ற நினைப்புத்தான்.

வேலப்பனும் அவர் எதிர்பார்த்த பதிலையே சொன்னான். "என்ன சாமி, கேலி பண்றீங்க? எனக்கு ஏது சாமி அதுக்கெல்லாம் பணம்? என்றான்.

"அப்படியானால் நானே பணம் போடுகிறேன். நானே கம்பெனி வைக்கிறேன். உனக்கு ஒரு தொல்லையும் வேண்டாம். பேசாமல் வேலை பார்த்துவிட்டு மாதம் பிறந்தால் முழுசா ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக் கொள். ராஜா மாதிரி இருந்து கொண்டு முருகாயியையும் ராஜாத்தி மாதிரி வைத்துக்கொள் . என்ன சொல்கிறாய்?" என்று தாம் வந்த காரியத்தை முடித்தார் அவர்.

அவன் ஒன்றும் யோசனை செய்யவில்லை. யோசனை செய்வதற்கு வேண்டிய அறிவுதான் இந்த அரசாங்கத்தில் அவனைப் போன்ற ஏழைகளுக்கு ஏது?

"அப்படியே ஆகட்டும் சாமி!" என்று 'ஆமாம்' போட்டு விட்டான்.

தேவைக்கு அதிகமான பணத்தை வைத்துக்கொண்டு செய்வது இன்னதென்று தெரியாமல் திகைப்பவர்கள் ஒரு பக்கமும், கஞ்சிக்குக் காசில்லாமல் கண் கலங்குவோர் இன்னொரு பக்கமும் வாழும் இந்தப் படுமோசமான நாட்டிலே பணக்காரன் நினைத்தால் நடக்காதது ஏது?

மறுநாளே மாந்தோப்பு அழிக்கப்பட்டது. அதே இடத்தில் சில நாட்களுக்கெல்லாம் ஓர் அழகான கட்டிடம் எழுந்தது. 'வேலைக்கு ஆள் தேவை' என்று சொன்னது தான் தாமதம். 'ஒரு வேளை உணவுக்கு வழி கிடைத்தால் போதும்' என்று எத்தனையோ நாட்களாக ஏங்கிக் கிடந்த ஏழைக் கூட்டம் - தனிப்பட்ட ஒரே ஒரு மனிதனின் ஏகபோக வாழ்விற்காகத் தங்கள் உடலையும் உயிரையும் தத்தம் செய்வதற்கென்றே அந்தக் கருணை மிகுந்த கடவுளால் கோடிக்கணக்கில் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கும் கூட்டம் - 'திமுதிமு' என்று வந்து சேர்ந்தது.

வேண்டிய ஆட்களை எடுத்துக் கொண்டார்கள்; வேலையும் தொடங்கி விட்டார்கள். கட்டில்கள் கட்டிவிட்டார்கள். நாடெங்கும் அனுப்பி விட்டார்கள். சர்க்கார் அதிகாரிகளும் மாதவராயரின் வேண்டுகோளுக்கிணங்கி, "இந்தியாவிலேயே நீங்கள் மட்டும்தான் இம்மாதிரிக் கட்டில்கள் செய்து ஊரைக் கொள்ளையடிக்கலாம். அந்தக் கொள்ளையில் வரியின் மூலம் எங்களுக்கும் கொஞ்சம் பங்கு கொடுங்கள். போட்டிக்கு யாராவது வந்தால் எங்களிடம் சட்டம் இருக்கவே இருக்கிறது!" என்று உத்திரவாதம் அளித்து விட்டார்கள்.

ஆமாம், அந்தக் கட்டில்களுக்கு ஆதி கர்த்தாவான வேலப்பன் கூட இனிமேல் மாதவராயரின் அனுமதியின்றி அம்மாதிரிக் கட்டில்கள் செய்ய முடியாது.

அதற்குப் பிறகு கேட்க வேண்டுமா? பலன் கிடைத்தது; பணம் குவிந்தது.

நாடெங்கும் கட்டில்களுக்கு ஏகக் கிராக்கி யுத்த காலத்தில் துருப்புகளுக்கு ஆயிரக்கணக்கில் கட்டில்கள் தேவையாயிருந்தன. 'ஆர்டர்கள் வந்து குவிந்தன.

"இனிமேல் வெறும் ஆட்களை வைத்துக் கொண்டு 'ஆர்டர்களைக் கவனிக்க முடியாது" என்று நினைத்த மாதவராயர் அமெரிக்காவிலிருந்து பல அதிசயமான யந்திரங்களைத் தருவித்தார். இருநூறு ஆட்கள் செய்யக் கூடிய வேலையை ஒரு யந்திரம் செய்தது. அது மரத்தை அறுத்தது; இழைத்தது; 'கூர்' வாங்கியது. எல்லாம் செய்தது பிரம்பைப் பிளப்பதற்கும், பின்னி விடுவதற்கும் கூட யந்திரம்! அவற்றை இயக்குவதற்குப் பழைய ஆட்கள்பிரயோஜனப்படவில்லை. புது ஆட்கள்வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். இதனாலெல்லாம் நாளடைவில் வேலப்பன் இருந்த இடமே தெரியவில்லை. எப்படித் தெரியும்?

ஒருநாள் வேலப்பன் வேலைக்குக் கிளம்பியபோது விளையாடிக் கொண்டிருந்த அவன் குழந்தை திடீரென்று மயக்கம் வந்து மூர்ச்சையாகி விழுந்துவிட்டது. முருகாயி 'கோ'வென்று கதற ஆரம்பித்து விட்டாள். வேலப்பன் பதறிப் போய்க் குழந்தையைத் தூக்கித் தோளின்மேல் போட்டுக் கொண்டு டாக்டர் வீட்டுக்கு ஓடினான். சிறிது நேரம்சிகிச்சை செய்த பிறகு குழந்தை மூர்ச்சை தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்தது, அப்பொழுது தான் வேலப்பனுக்கும் முருகாயிக்கும் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

இந்தக் களேபரத்தினால் வேலப்பன் அன்று வேலைக்குச் செல்லவில்லை.

இதன் காரணமாக மறுநாள் வேலைக்குச் சென்ற வேலப்பன் முன்னறிவிப்பு இல்லாமல் முதல் நாள் வேலைக்கு வராமற் போனதற்காக மேலதிகாரியால் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

ஆனால், தனிப்பட்ட முறையில் மேலதிகாரி அவனை வேலையிலிருந்து நீக்கவில்லை. முதலாளியின் உத்தரவின் பேரில்தான் நீக்கினார் - அப்படி நீக்கியதற்குக் காரணம் அன்று வேலப்பன் வேலைக்கு வராதது மட்டும் அல்ல வேறொரு காரணமும் இருந்தது.

அது இதுதான்.

பெருமைக்கு ஆசைப்படாத மனிதன் யார்? ஒருவனும் கிடையாது. அதற்கு வேலப்பன் மட்டும் விதி விலக்கா,என்ன? அவன், "முதலாளி இவ்வளவு பெரிய மனிதரானதற்கு நான்தான் காரணம்" என்று தன்னுடன் வேலை செய்பவர்களிடம் அடிக்கடி சொல்லிக் கொள்வது வழக்கம். இது மாதவராயரின் காதுக்கு அடிக்கடி எட்டிக் கொண்டிருந்தது. அவன் அப்படிச் சொல்லிக் கொள்வது அவருடைய சுயமரியாதைக்குப் பங்கம் விளைப்பதாயிருந்தது. ஆனாலும் என்ன செய்வது என்று தெரியாமல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

இதெல்லாம் தெரியாத அப்பாவி வேலப்பன் தன்னை மேலதிகாரி வேலையிலிருந்து நீக்கியதைப் பற்றிப் புகார் செய்ய முதலாளியை நெருங்கினான்.

"என்னடா?" என்றார் அவர் கம்பீரமாக. வேலப்பன் விஷயத்தைச் சொன்னான்

தாழ்மையாக.

'மேலதிகாரி சொன்னால் சொன்னது தான்!' என்றார் மாதவராயன்

வேலப்பன் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. "இதற்குத்தானா நான் செய்துகிட்டிருந்த வேலையைக் கூடக் கெடுத்தீங்க!" என்றான் மனம் நொந்து.

அவ்வளவுதான்; மேஜை மேலிருந்த மணி 'டங்' என்று ஒலித்தது.

வாயிலில் உட்கார்ந்து கொண்டிருந்த 'கூர்க்கா' ஓடோடியும் வந்தான்.

அடுத்த நிமிஷத்தில் வேலப்பன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்பட்டான்!

அதே சமயத்தில் அருகிலிருந்த ஓடக் கரையிலிருந்து அமரகவி பாரதியாரின் அருட் கவிதை காற்றில் மிதந்து வந்து அவன் காதில் 'கணீ'ரென்று ஒலித்தது.

"விழலுக்கு நீர் பாய்ச்சி
மாய மாட்டோம் - வெறும்
வீணருக் குழைத் துடலம்
ஓய மாட்டோம்!"

## பயிற்சி

### I. ஒரு வரியில் விடை தருக :-

1. 'சுயநலம்' சிறுகதையில் வேலப்பன் கடைவீதிக்குச் சென்று வாங்கி வருவன யாவை?
2. வேலப்பன், தன் மனைவி முருகாயியுடன் பேசும் பேச்சின் வகைகளைக் கதையாசிரியர் குறிக்குமாறு எழுதுக.
3. வெகு நாட்களாக வேலப்பனின் வேலையைக் கவனித்து வந்தவர் யார்?
4. முருகாயியிடம் மாதவராயர் வெய்யிலைப் பற்றிக் கூறியதும் அவள் அளித்த விடை யாது?

### II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. வேலப்பனின் வேலை அலாதியானது என்று கதையாசிரியர் விந்தன் கூறக் காரணம் யாது?
2. வேலப்பனின் குடும்பம் கட்டில் வேலையை எவ்வாறு பகிர்ந்து கொள்கிறது?
3. மாதவராயருக்கு அரசு அதிகாரிகள் சட்டத்தின் மூலம் அளித்த உத்திரவாதத்தை எழுதுக.
4. 'சுயநலம்' சிறுகதையில் வேலப்பனின் வேலை போனதற்கு மூலகாரணமாவது யாது?

### III. ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக:-

1. ‘சுயநலம்‘ சிறுகதையில் மாதவராயர் விரித்த வியாபார வலையை விவரிக்க.
2. கட்டில் தொழில் வல்ல வேலப்பன் நாளடைவில் இருந்த இடம் தெரியாமல் போனதற்கான காரணங்களை எழுதுக.
3. வேலப்பன், தன் வேலை நீக்கத்தை முதலாளி மாதவராயரிடம் புகார் செய்த பிறகு நிகழ்ந்தவற்றை எழுதுக.

### IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-

1. என்ன வேலப்பா! தினசரி! வெய்யிலில் இப்படி வியர்க்க விறுவிறுக்க வேலை செய்கிறாயே!
2. ‘முருகாயியை வெட்கம் பிடுங்கித் தின்றது’
3. ‘சரி; நீயும் கொஞ்சம் போடு; நானும் கொஞ்சம் பணம் போடுகிறேன்.’
4. ‘அவனா நம்முடன் பணம் போடப்போகிறான்.’
5. “அப்படியே ஆகட்டும் சாமி” என்று ஆமாம் போட்டுவிட்டான்”.

**குறிப்பு :**

தொழிலாளர் சுரண்டப் படுவதைக் குறித்து சிறுகதை ஒன்றினை வரைக.

## 4. புகைச்சல்

- ஜெயகாந்தன்



சிதைகளிலிருந்து எழுந்த புகை நடுவே, சுடலை பூமியில் திரியும் சிவபிரானைப்போல், குடிசையைச் சுற்றிலும் தோட்டத்தில் வைக்கப்பட்டுள்ள புடக் குழிகளின் புகை நடுவே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் வைத்தியர் சுவாமிகள்.

அவிந்த குழிகளிலிருந்து புடம் வைக்கப்பட்ட சட்டிகளைச் சேகரித்துக்கொண்டு குடிசையின் முன்னுள்ள பந்தலுக்கு வந்து உட்கார்ந்தார் சாமியார். பச்சிலைக் கட்டு, இலை இடிக்கும் கல்லுரல், மருந்து அரைக்கும் கலுவம், புகைத்தெறிந்த பீடித் தண்டுகள் இவற்றின் நடுவே விரித்த கோரைப் பாயில் சுகாசன மிட்டு அமர்ந்த சாமியார் சற்று நேரம் தாடியை நெருடி கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு இடுப்பில் கட்டியிருந்த அரைத் துண்டில் முடிந்து வைத்திருந்த சிறு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார். மடியிலிருந்த பீடியைக் கட்டவிழ்த்து, பீடிப் புகையிலையைக் கொட்டிவிட்டு, அந்த இலையில் ‘பொட்டல மருந்தைக் கொட்டிச் சுருட்டினார்.

“கண்கள் இரண்டும் எங்கோ வெறித்தவாறிருந்தன! அவர் கைகளுக்குக்கூட கண்கள் உண்டோ?....

எங்கோ பார்த்துக்கொண்டே மூலையிலிருந்த கைப்பெட்டியைத் திறந்து தீப்பெட்டியை எடுத்துப் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டார்...

“பார்வை எங்கோ நிலைகுத்தி நின்றது.

பீடிப் புகையை ஆழ்ந்து உள்ளுக்கு இழுக்கும்போது கண்கள் லேசாகக் கிறங்குவது போல் மூடின... உள்ளிழுத்த புகையை நெஞ்சில் நிறுத்தி, சகல புலன்களையும் அடக்கி, புகையின் தன்மையை யாருக்கோ அர்ப்பணிப்பது போல் மௌனத்தில் ஆழ்ந்தார் சாமியார். பிறகு புகை வெளியே பரவிற்று. அந்த இடத்தில் தாமரை மலரின் மெல்லிய சுகந்தம் பரவிற்று.

சாமியார் கண்களைத் திறந்துபோது இரண்டு கனல் துண்டுகள் ஜ்வலித்தன. அவர் வாய்விட்டு சிரத்தை உலுப்பியவாறு சிரித்தார். அவர் சிரிக்கும்போது அந்தச் சிரிப்பு நாபிக் குழியிலிருந்து சுழித்துக் கிளம்பித் தொண்டையிலிருந்து தெறித்து விழும். சில சமயங்களில் அலை அலையாய்ப் புரண்டு வரும்.

சிறிது நேரத்தில் பீடி முழுவதையும் புகைத்தெறிந்து விட்டுத் தொழிலில் முனைந்தார்.

பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது...’ என்று தன்னை மறந்து பாடிக்கொண்டே புடம் வைத்த சட்டிகளைத் திறந்து வைத்தார். அவற்றுள் வட்ட வட்டமாய்ப் பாத்திரத்தில் வைத்திருந்த வில்லைகளை எடுத்து லேசாகத் தட்டிப் பார்த்தார்.

‘ம்...எஃகு நிறம் கண்டுவிட்டது. இன்னம் ரெண்டுபுடம் வச்சா தங்கமாயிடும், தங்கமா...’ என்று மனம் கும்மாளியிட்டது.

அடுத்ததைப் பிரித்தார்;

‘பக்குவமாய் விட்டது; பொடித்து வைத்துவிட வேண்டியது தான்’ என்று வில்லையைக் கலுவத்திலிட்டு நெறித்தார்.

அவர் முகம் கலுவத்தில் குனிந்திருந்தது. கவனமெல்லாம் மருந்திலேயே லயித்திருந்தது.

வெளியே, புகைந்து புகைந்து வரும் வரட்டு இருமல் சப்தம் கேட்டது.

சாமியாருக்குக் காதிலேயே கண்ணுண்டு போலும்!

“ஓய் செட்டியாரே, நெஞ்சுப் பொகைச்சல் வந்தால் தான் சாமியாரின் நெனைப்பும் வருதோ? ரெண்டு நாளா ஆளையே காணோமே. வாரும் வாரும் வேலிப் படலைச் சாத்திட்டு வாரும். இல்லாட்டி ஆடு பூந்திடும்“ என்று கலுவத்தில் குனிந்து தலை நிமிராமல் உற்சாகமாய்க் கூவினார் சாமியார்.

அவருக்கு எப்போதுமே உற்சாகம்தான்.

அவர் மௌனமாக அமர்ந்திருக்கும்போதும் கூட, ஆயிரம் சக்கரங்கள் நிறைந்த அபூர்வ யந்திரம் ஒன்று இயங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றும்.

செட்டியார் பதில் ஏதும் கூறாமல் சாமியாரின் அருகே வந்து பலமாக ஒரு முறை இருமிவிட்டுக் கைத்தடியைத் தரையில் ஊன்றி உட்கார்ந்தார்.

வைரவன் செட்டியார் வாழ்க்கையில் அடிபட்டுக் கழன்று போய், இயங்கித் தளர்ந்த, பழுதுபட்ட யந்திரம். சாமியாரும் செட்டியாரும் சம வயதினர்; வெகு நாளைய நண்பர்கள் இருவருக்குமிடையே எவ்வளவு வித்தியாசம்!

ஒன்று, வாழ்வின் சுகங்களையெல்லாம் ஆண்டு, அனுபவித்து சலித்து நப்பாசையுற்றுத் தடுமாறுவது. மற்றொன்று, சுகங்களைத் துறந்து, தன்னை ஆண்டு, தன்னையும் துறந்து, வஜ்ரம்போல் உறுதிபெற்று வாழ்ந்து, நிமிர்ந்து நிற்பது.

சுகமா?-எது சுகம் என்று நிர்ணயிப்பது? சுகத்தை அனுபவித்தவனுக்குச் சோர்வு ஏன் வர வேண்டும்?...

சாமியார் என்ன நினைத்தாரோ? கருத்தடர்ந்த தாடியில் சிரிப்பு வழிந்து கொண்டிருந்தது.

“என்ன ஓய் செட்டியாரே, தொண்டைப் புகைச்சலா, இருமுகிறீரே?”

“செட்டியாரின் கண்கள் கலங்கின.

“மனப் புகைச்சல்தான் சாமியாரே, மனப் புகைச்சல்தான் என்று இரண்டு கைகளாலும் மார்பில் அடித்துக் கொண்டார் செட்டியார்.

வேறு யாராவதாக இருந்தால் அந்தக் கிழவர் அடித்துக் கொண்டதைப் பார்த்துப் பயந்து போயிருப்பார்கள். பதறித் தடுத்தாவது இருப்பார்கள். சாமியாரோ சாவதானமாகச் சிரித்தார்.

“வீட்டில் ஏதாவது பெலஹீனமா?” என்று கேட்டுவிட்டுச் சிரித்தார்.

சாமியார் அகராதியில் பெலஹீனம்‘ என்றால் கோபம் என்று பொருள்!

“சாமியாரே, வயசாயிட்டா மனுசன் உசிரோட இருக்கப்படாது ஐயா...எதிரே நிக்க பயந்தவங்க எல்லாம் இப்ப எடுத்தெறிஞ்சி பேசறாங்க...”

“விஷயத்தைச் சொல்லும்..”

“என்ன புது விஷயம்... கட்டின பொண்டாட்டியும், கண்ணாய் வளர்த்த புள்ளையும் வெறுத்தப்புறம், என்னெ ஒரு சொமையா நெனைச்சி ‘இந்தக் கிழம் எப்ப சாகும்‘னு சொன்னப்பறமும் இந்த ஒலகத்திலே எதுக்கு இருக்கணும் சாமியாரே..”

“உம், அப்புறம்.?”

“இனிமே அந்த வீட்டிலே அடியெடுத்து வைக்கிறதில்லேண்ணு..”

“சத்தியம் பண்ணலியே... கெடக்கு; விட்டுத் தள்ளும்...” என்று சிரித்தார் சாமியார்.

இல்லே சாமியாரே... நான் இனிமே அந்த வீட்டுக்குப் போக மாட்டேன். அவன் எனக்குப் பிள்ளை இல்லே...வயிறு எரியுது சாமியாரே, வயிறு எரியுது. இந்த வைரவன் செட்டி அப்படியெல்லாம் மானம் கெட்டு வாழ்ந்தவனில்லே, ஒனக்குத் தெரியாதா சாமியாரே... நான் வாழ்ந்த வாழ்வென்ன, நான் இருந்த இருப்பு என்ன...? இந்தப் பாவிப் பய படிப்புக்கும் கல்யாணத்துக்கும் தானே என் சொத்தெல்லாம் வித்தேன். அந்தப் பயதான் இந்தச் சிறுக்கிக்கு இப்பப் பெரிய மனுசனாயிட்டான்....?

“செட்டியார் குறிப்பிட்ட ‘பாவிப் பயல்’ அவரது மகனான வேலாயுதம் என்பதும் ‘சொத்தெல்லாம்‘ என்றது, தோட்டத்தில் சில வருஷங்களுக்கு முன் பிண்ணாக்கு அரைத்துக் கொண்டிருந்த செக்கும் இரண்டு மாடுகளும் என்பதும், இந்தச் சிறுக்கி’ என்றது அவரது மனைவி விசாலாட்சி அம்மாள் என்பதும் சாமியாருக்குப் புரிந்தது.

“ஏனய்யா புலம்புறீர்? நடந்ததைச் சொல்லும்“

“இன்னிக்கு நடந்தது மட்டுமில்லே சாமியாரே, நானும் கொஞ்ச நாளாப் பார்த்துக்கிட்டுத்தான் வாரேன். நான் ஒருத்தன் இருக்கிறது அவங்க யாருக்கும் புடிக்கலே; இனிமே என்னாலே என்ன லாபம்?.... காத்தாலே காபி - பலகாரம் எடுத்து வையிடின்னேன் ‘கொஞ்சம் இருங்க இன்னும் ஆகலே’ இல்லையா வார்த்தை? என்ன சொன்னா தெரியுமா! பொழுது ஒரு பக்கம் விடிஞ்சிதா என்னா அவுதி?.... ஆபிசுக்குப் போறதா கெட்டுப் போவுது’ன்னு இஷ்டத்துக்குப் பேசினா. நான் என்ன இவ வூட்டு வேலைக்காரனா? இந்த வாழ்வு யாராலே வந்துதுன்னு நெனச்சிப் பாக்க நேரம் இல்லையான்னு நான் கேட்டா, இவனுக்கு என்ன வந்தது? இவன் என்னா பெரிய கெவர்னரோ... ‘எங்க ஆயி மேலே இன்னொருதரம் கைவச்சா மரியாதை கெட்டுப் போயிடும்‘ங்கிறான் சாமியாரே.... என்னைப் பார்த்து இவன் கேக்கிற கேள்வியா சாமியாரே, இது? அப்புறம் அந்தப் பக்கம் போயி, ‘இந்தக் கெழம் சாகாமெக் கிடந்து நம்ப உசிரை வாங்குதே’ன்னு சொல்றான் சாமியாரே. நான்

இவனுக்காக எவ்வளவு பாடுபட்டிருப்பேன். அதெல்லாம் நெனச்சிப் பார்த்தானாய்யா.... என் வயித்தை எரியுது" என்று கண்களைத் துடைத்துக்கொண்டார் செட்டியார்.

"பெலஹீனம்... பெலஹீனம்.." என்று சிரித்தார் சாமியார்.

"எனக்கு மனசே வெறுத்துப் போச்சு ஐயா, வெறுத்துப் போச்சு" அவர் உதடுகள் துடித்தன; அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

"உம்மாலே எதையும் வெறுக்க முடியாது செட்டியாரே" என்றார் சாமியார்.

அந்தச் சமயம் செட்டியாரின் புதல்வன் வேலாயுதம் ஆபிசுக்குப் போகும் கோலத்தில் தெரு வழியே நடந்து வருவதைப் பார்த்தார் சாமியார்.

"செட்டியாரே, உம்ம மகன் வரான் பாரும்."

"கூப்பிடத்தான் வருவான். பெத்த தகப்பன்னு மரியாதை இல்லாதவன் வீட்டுக்குப் போகவா? முடியாது சாமியாரே" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டார் செட்டியார்.

ஆமாம். பயல் ஒரு தடவைக்கு நாலு தடவை வந்து கெஞ்சணும். அந்த சிறுக்கியையும் கண்டிச்சி அவனே புத்தி சொல்லணும். கூப்பிட்டவுடனே ஓடப்படாது............கடுகு சிறுத்தாலும் காரம் போகாது டோய்............என்று மனசில் மார்தட்டிக் கொண்டார் செட்டியார்.

ஆனால், வேலாயுதமோ அவருக்குச் சிரமம் கொடுக்காமல் தெரு வழியே நடந்து சென்றான்.

"பாத்துக்கிட்டே போறான் பாரு சாமியாரே, என்னா அலட்சியம்!... அட நன்றி கெட்டவனே, உன்னை வளர்த்து ஆளாக்க என்ன பாடுபட்டிருப்பேன்... என்ன திமிரோட போறான் பாரு சாமியாரே..." என்று அவன் போன திக்கைப் பார்த்துப் புலம்பினார் செட்டியார்.

வானவெளியைப் பார்த்துக்கொண்டு சாமியார் 'கடகட' வென்று சிரித்தார்.

"நீ என்ன பண்ணுவே, ஒலகத்தைப் பார்த்துச் சிரிக்கக் கத்துக்கிட்டவன் நீ. ரெண்டு பெத்து வளர்த்து, பட்டிருந்தா தெரியும்... ஒனக்கு ஞாபகம் இருக்கா? இந்தப் பயலுக்கு பத்து வயசிலே ஒரு வாந்திபேதி வந்துதே... தூக்கித் தோள் மேலே போட்டுக்கினு உன்கிட்ட ஓடியாந்தேனா.. நீ என்ன செஞ்சே? என்னமோ ஒரு சூர்ணத்தெக் கொழச்சி வாயிலே தடவினே.. அப்பவே புள்ளைக்கித் தலை தொங்கிப் போச்சி, அத்தோட விட்டியா?.... விடியற வரைக்கும் தாய்ப் பாலைத் துணியிலே நெனச்சி நெனச்சி நெத்தியிலே போடச் சொன்னியா? நான் எங்கேய்யா போவேன் தாய்ப் பாலுக்கு? அப்போ நேரம் என்னா? ராத்திரி பதினொன்றரை வண்டி போய்ட்டான். தாய்ப்பாலு.. ராத்திரி பூரா நெனைச்சிப் போட எங்கே போறது? வீட்டிலே கொண்டு போய்ப் புள்ளையே போட்டா, பலகையிலே கெடக்கற பழந் துணி மாதிரி தோ, இப்பிடி ஆயிட்டான்... சாமியாரே இப்படி.. அட என்னப் பாருய்யா..."

சாமியார் எங்கோ வானவெளியில் ஊதிய புகையில் லயித்திருந்தார். அவரைத் தம் வசம் ஈர்த்து ஆள் காட்டி விரலைக் குச்சி மாதிரி காட்டித் தொடர்ந்தார் செட்டியார்.

“....தோ, இப்பிடி ஆயிட்டான் ஐயா; அவன் ஆத்தா, பொரண்டு பொரண்டு ஒப்பாரி வெக்க ஆரம்பிச்சுட்டா. நான் என்னய்யா பண்ணுவேன்.. கையும் புரியலே.. காலும் புரியலே.. மகமாயி கோயில்லே போய் கதறி இருக்கேன் அப்படிக் கதறி இருக்கேன்.. அழுதுக்கிட்டே நின்னா போற உசிரைப் புடிச்சி நிறுத்த முடியுமாய்யா?

“அப்புறம் என்னா பண்ணேன்னு கேளு. அடுத்த நாளு எள்ளு வாங்கறதுக்காக வச்சிருந்த பணத்தை எடுத்து மடியிலே கட்டிக்கிட்டு செம்பையும் எடுத்துக்கிட்டு ஓடினேன் பாரு, ஓடினேன். அப்படி ஓடினேன்..எங்கே?... பள்ளத் தெருவுக்கு. அப்ப மணி என்னா! பதினொன்னரை போய்ட்டான். தூங்கிக்கிட்டிருந்த பள்ளன்களை எழுப்பி, கண்ணு இல்லே பொன்னு இல்லேன்னு காலைப் புடிக்காத கொறையா கெஞ்சி, ரெண்டனா தர்ரேன் நாலணா தர்ரேன்னு சொல்லி யாரு யாரு கிட்டேயோ போயி பாலுகூட இல்லே, ராவு நேரம். அவ அவ புள்ளையும் அப்பத்தான் முட்ட முட்ட உறிஞ்சிட்டிருக்கும். வீட்டிலே கெடக்கற புள்ளை என்ன ஆச்சோன்னு வேறே மனசு கெடந்து அடிச்சிக்குது அங்கே ஒரு ஆளு ‘பாளையத்துக்கு வா சாமி, வாங்கித் தாரேன்’னான்... ரெண்டு கல்லு தூரத்தே எப்படித்தான் தாண்டிப் போனேனோ?.... அங்கே போனா ஒரு நாலைஞ்சு பொம்பளைங்க தந்தாளுவ.. அப்புறம் ஒருத்தி வந்தா... பாவம், மொத நாளுதான் கைப்புள்ளை செத்துப் போச்சாம்.. அவளுக்கு அந்த வருத்தமோ, என்னா வெறியோ?.... என் கண்ணாலே பார்த்தேன் சாமி, சொம்ப வாங்கிக்கிட்டு அந்தப் பக்கமா திரும்பினா... ஒரு நிமிசத்திலே சொம்பு நெறைஞ்சு வழிஞ்சி போச்சி சாமியாரே.. அப்பிடியே மயங்கிட்டா, கண்ணிலே தாரை தாரையா தண்ணி கொட்டுது. நானும் அழுவுறேன்; அவளும் அழுவறா..”

“அவள் தெய்வம்!” சாமியார் வானவெளியை வெறித்தவாறு முணுமுணுத்தார்.

“அவ நெஞ்சுச் சொமையெல்லாம் கையிலே ஏந்திக்கிட்ட மாதிரி சொம்பு கனக்குது.. மடியிலேருந்த சில்லறை எல்லாம் அவ புருஷன் கையிலே குடுத்திட்டு ஓட்டமும் நடையுமா அந்த இருட்டிலே வரப்புலேயும் வாய்க்கால்லேயும் விழுந்து ஓடியாந்தேன்.

“இல்லாட்டி அந்தக் கண்டத்திலேயே போயிருப்பானே சாமியாரே... அட, என்னெப் பாருய்யா. இப்ப என்னாடான்னா இது நம்மை எடுத்தெறிஞ்சிப் பேசறதும், மதிக்காம போறதும்.. பட்ட கஷ்டமெல்லாம் இதுக்குத்தானா சாமியாரே... நெனைச்சா மனசு ஆறமாட்டேங்குது....”

செட்டியார் படபடத்துப் பேசினார். ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்து அழுதார்.

கலுவத்திலிருந்த பஸ்பத்தை அரைத்துக்கொண்டே சாமியார் சாவதானமாகச் சொன்னார்; “செட்டியாரே மனசை அலட்டிக்காதீர். பாசம் இருக்கிற உறவை வெறுக்கறது அவ்வளவு சுலபமில்லை....”

“இல்லே சாமியாரே! அப்படியெல்லாம் பாடுபட்டு வளர்த்த ஒரே புள்ளை, என்னை வெறுத்து எப்ப சாகப் போறேன்னு கேக்கறான். ஆசையா வாழ்ந்த பொண்டாட்டி மதிக்கமாட்டேங்கறா! எனக்கு மனசே வெறுத்துப் போச்சு.

“தாத்தோவ்... தாத்தோவ்...” என்று தோளில் தொங்கும் புத்தகப் பையுடன் அவரது பேரன் ஓடி வந்தான். மௌனமாய் அவனை மடியிலிருத்தி அவன் தலையை வருடியவாறு கண்ணீருகுத்தார் கிழவர்.

“நீ ஏன் தாத்தா சாப்பிட வரல்லே?.... இன்னிக்கு ஆப்பம் சுட்டாங்களே. தேங்காப் பாலு ஊத்தி நான் தின்னேனே.. நீயும் வா, வந்து சாப்பிடு.”

“பாட்டி கூப்பிடச் சொன்னாளா?” என்று ரகசியமாய்க் கேட்டார் பையனிடம்.

“ஊஹூம்.. நானேதான் கூப்பிட்டேன். வீட்டுக்குப் போ தாத்தா. நான் பள்ளிக்கூடம் போறேன்” என்று சிறுவன் எழுந்து ஓடினான்.

சாமியார் சப்தம் போட்டுச் சிரித்தார். கிழவர் இருமினார். இருமல் புகைந்து புகைந்து வந்தது.

நேரம் ஆக ஆகக் கிழவரின் பிடிவாதம் பிடி தளர்ந்தது. மனைவியோ மகனோ வந்து தன்னை அழைக்க மாட்டார்களா என்று மனம் ஏங்கியது.

மணி ஒன்பதாயிற்று!

மணி ஒன்றாயிற்று!

ஆபிசிலிருந்து மத்தியானச் சாப்பாட்டுக்காக வீட்டுக்குப் போகும் மகன் தன்னைப் பார்த்தும் கூப்பிடாமல் அலட்சியமாய்ப் போனதைக் கண்டு மனமுடைந்து போனார் கிழவர்.

“செட்டியாரே, பெலஹீனம் இன்னும் தணியலியா? வீட்டுக்குப் போகலியா? என்றார் சாமியார்.

“இல்லை, சாமியாரே..நான் போகமாட்டேன்” என்று குழந்தை போல் அழுதார் கிழவர்.

“சரி இந்தக் கலுவத்திலிருக்கிற மருந்தைப் பார்த்துக்கிடும். நான் போயி டீ குடிச்சிட்டு வாரேன். உமக்கு ஏதாவது சாப்பிட..”

“எனக்கொண்ணும் வேண்டாம்...”

“ஒண்ணும் வேண்டாட்டி. மனுசன் ஏங்காணும் உசிரை வெச்சிக்கிட்டு இருக்கான். நான் கொண்டுவந்து தர்ரதைச் சாப்பிடணும்“ என்று சொல்லிவிட்டுத் துண்டை உதறித் தோள் மீது போட்டுக்கொண்டு நடந்தார் சாமியார்.

“சாமியாரே, இதென்ன மருந்து?” என்று கலுவத்திலிருந்த மருந்தைக் காட்டிக் கேட்டார் செட்டியார்.

“செட்டியாரே ஜாக்கிரதையா பார்த்துக்கிடும். அது கெட்ட ஜாதிப் பய பாஷாணம்.... கையிலே கிய்யிலே படப்போவுது!” என்று எச்சரித்துவிட்டுப் போனார் சாமியார்.

சாமியார் போனதும் செட்டியார் தனிமையில் மனம் பேதலித்துப் போனார். அழுது தீர்த்தார். உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றியது. மானம் கெட்டு வீட்டுக்குப் போய்ச்

சாப்பிடுவதைவிட இதோ இருக்கிறதே விஷம், இதைத் தின்று உயிரை விட்டுவிடலாம் என்று தோன்றியது.

வாழ்ந்த வாழ்வெல்லாம், இருந்த இருப்பெல்லாம் மனக்கண் முன் விரிந்தன. இனி தான் வாழ்வதில் அர்த்தமில்லை என்று ஒரு விரக்தி பிறந்தது.

‘இதென்ன பைத்தியக்காரத்தனம்? எதற்கு அழவேண்டும்? உலகில் இருப்பதற்கோ, அனுபவிப்பதற்கோ, இனிமேல் என்ன இருக்கிறது? பிறருக்குப் பாரமாய் ஏன் வாழ வேண்டும்? மானத்தோடு வாழ்ந்த வைரவன் செட்டி மானத்துக்காகவே செத்தான் என்று ஊர் பேசட்டுமே என்று உறுதியான முடிவில் அவர் சிரம் நிமிர்ந்தது. கண்களை மூடித் தமது இஷ்ட தெய்வமான முருகனை வேண்டிக் கொண்டார்.

‘இந்தக் கெழம் சாகாம கிடந்து நம்ம உசிரை வாங்குதே..’

செட்டியாரே உம்மாலே எதையும் வெறுக்க முடியாது!

‘ஒண்ணும் வேண்டாட்டி மனுசன் ஏங்காணும் உசிரை வெச்சிக்கிட்டு இருக்கான்?

‘இது கெட்ட ஜாதிப்பய பாஷாணம்!’

...செட்டியார் தீர்க்கமாக, ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

நடுங்கும் விரல்களால் பக்கத்திலிருந்த சிறு கரண்டியை எடுத்தார். கலுவத்தில் இருந்த மருந்தை ஒரு கரண்டி அள்ளி வாயிலிட்டு விழுங்கினார். நெஞ்சில் அடைப்பது போல் இருந்தது. மண் கூஜாவிலிருந்த தண்ணீரைக் குடித்தார். பிறகு மரணத்தை எதிர்நோக்கி மௌனமாய் நிஷ்டையில் அமர்ந்தார்.

டீக்கடையிலிருந்து வெளியே வரும்போது, ஆபீசுக்குப் போகும் வேலாயுதத்தைக் கண்டார் சாமியார்.

“என்ன வேலாயுதம், உங்க ஐயா ரொம்பவும் வருத்தப் படறாரே. வயசான காலத்திலே அவரை நல்லா வெச்சிருக்க வேணாமா? உன்னைத் தவிர அவருக்கு வேறே யார்?” என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே வேலாயுதம் குறுக்கிட்டான்;

“சாமி, நீங்களே சொல்லுங்க, அவருக்கு நான் எதுவும் கொறை செஞ்சி இருப்பேன்னு நீங்க நெனைக்கிறீங்களா? இவரைக் கண்டு தானே எல்லாம், இவர் சொல்லை மீறி நான் நடந்திருக்கேனா?... இவரே ஏதாவது தப்பா நெனைச்சிக்கிட்டு எப்பப் பார்த்தாலும் சத்தம் போட்டுக்கிட்டே இருக்காரு. நான் ஒண்ணும் காதிலே போட்டுக்கறதில்லே. பெரியவர், போனா போறார்னு இருந்திடறேன். இன்னக்கிக் காலையிலே இவர் தொந்தரவு பொறுக்காம அம்மா எதுவும் சொல்லி இருக்கும் போல இருக்கு. இவர் என்ன பண்ணார் தெரியுமா?... கையிலேருந்த தடியாலே ஓங்கி அடிச்சிட்டாரு. நல்ல வேளை... கையிலே பட்டதோட போச்சி, மண்டையிலே விழுந்திருந்தா என்ன ஆகியிருக்கும்?...”

“பெலஹீனம்... பெலஹீனம்...” என்று சிரித்தார் சாமியார்.

“இது வரைக்கும் ஒரு வார்த்தை நான் சொன்னதில்லே. ‘இப்படிப் பண்ணலாமா அப்பா’ன்னு கேட்டா,’எப்பவுமே நீயும் அவளும் ஒண்ணு. நீ என்னடா பெரிய மனுசன்’னு.... இன்னும் என்னன்னமோ கண்டபடி பேசிட்டு, இனிமே இந்த வீட்டு வாசலை மிதிக்க மாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. இவர் வீடுதானே இது? யாருக்கு இவரைப் போகச் சொல்லத் தைரியம் இருக்கு? எனக்கு வேறே வேலை இல்லையா சாமி...’ என்று பொரிந்து தள்ளினான் வேலாயுதம்.

“சரி அப்பா, நடந்தது போகட்டும். இப்ப நீ வந்து கூப்பிட்டா வந்திடுவாரு. ரொம்ப மனசு உடைஞ்சி போயிருக்கார். அன்பா நடத்தினா, அவரே தன் தப்பை நெனைச்சி வருத்தப்படுவார். வா, வந்து அழைச்சிக்கிட்டுப் போ” என்று வேலாயுதத்தைத் தன்னோடு கூட்டி வந்தார்.

சாமியாரும் வேலாயுதமும் குடிசைக்குள் நுழையும்போது செட்டியார் நீட்டிப் படுத்துக் கிடந்தார்.

“ஓய் செட்டியாரே.... எழுந்திரும், தூக்கமா?... உம்மவன் வந்திருக்கான் பாரும்“ என்று கூவினார் சாமியார்.

செட்டியார் கண்களைத் திறந்து பார்த்தார்.

“அப்பா!” என்று வாஞ்சையுடன் கூப்பிட்டான் வேலாயுதம்.

செட்டியாரின் கண்கள் கலங்கின. மகனைத் தாவி அணைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதார்.

‘அவன்தானே கொள்ளி வைக்க வேண்டும்‘ என்ற நினைப்பு.

“வருத்தப் படாதீங்க அப்பா. நான் ஏதாவது தப்பா பேசி இருந்தா மனசிலே வெச்சிக்காதீங்க. வீட்டுக்குப் போகலாம் வாங்க அப்பா” என்று அவர் கையைப் பிடித்து அழைத்தான் வேலாயுதம்.

கிழவருக்கு நெஞ்சில் என்னவோ அடைத்தது.

“போமய்யா செட்டியாரே, இதெல்லாம் சகஜம்தான். பையன் வந்து கூப்பிடறான்...உம்“ என்று சாமியாரும் முடுக்கினார்.

கிழவர் எழுந்து நின்றார்; கால்கள் நடுங்கின.

“பசி மயக்கம், பாத்து அழைச்சிக்கிட்டுப் போ” என்றார் சாமியார்.

தகப்பனைத் தாங்கி அழைத்துக் கொண்டு நடந்தான் வேலாயுதம். அவர்கள் வேலியைத் தாண்டியவுடன் சாமியார் கலுவத்தைப் பார்த்தார்; கரண்டியைப் பார்த்தார். சிரிப்பு தீ போல் பிடித்துக்கொண்டு பெருகியது.

வீட்டு வாசற்படியில் செட்டியாரின் மனைவி விசாலாட்சி அம்மாள் நின்றிருந்தாள். காலையில் கிழவர் கோபாவேசத்துடன் கைத்தடியால் அடித்த தழும்பு அவள் புஜத்தில் புடைத்திருந்தது.

“என்னெ அடிச்சதுமில்லாம ஒங்களுக்கு என்ன கோபம் வந்தது? அடியும் பட்டு, பட்டினி கெடந்து சாகணுமா நான்?..” என்று அவள் அங்கலாய்த்த போதுதான் அவள் தனக்காகச் சாப்பிடக்கூட இல்லையென்பதை உணர்ந்தார் அவர். அவர் கண்களில் கண்ணீர் கரை புரண்டது.

‘உசிர் இன்னம் எவ்வளவு நேரமோ?’ என்ற நினைப்பு வந்ததும் மனைவியின் கரத்தைப் பற்றி முகத்தில் வைத்துக் கொண்டார். அவள் கை நனைந்தது..

“இப்படி அழுது அழுதுதான் என் மனசை இத்தனைக் காலமா கரைச்சிருக்கீங்களே, போதாதா?” என்று சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு அவரை உள்ளே அழைத்துச் சென்றாள் விசாலாட்சி அம்மாள்.

“ரெண்டு நாளா ராவிக்கெல்லாம் இருமுறீங்களேன்னு எண்ணெய் காய்ச்சிவெச்சி வெந்நீர் போட்டிருந்தேன். தலை முழுகிட்டுச் சாப்பிடலாம்னா அப்படி ஒரு கோபம் வந்திடுச்சி. இப்பவாவது சீக்கிரம் எண்ணெய் தேய்ச்சிக்குங்க” என்று கூடத்தில் உட்கார வைத்து அவர் தலையில் எண்ணெய் வைத்து அவளே தேய்த்தாள்.

மருமகள் அம்மியில் சீயக்காய் வைத்து அரைத்தாள்.

இவ்வளவு நேரம் துக்கத்தை அடைத்து வைத்துக் கொண்டிருந்த செட்டியாரின் நெஞ்சைப் பீறிக்கொண்டு அழுகை வெடித்தது.

“ஐயையோ தெய்வமே! புத்தியில்லாம விஷத்தைக் சாப்பிட்டுட்டேனே..டேய் மகனே.. வேலாயுதம்... போயி அந்தச் சாமியாரே கூட்டியாடா.. கண்ணே” என்று குரலெடுத்துக் கூவி ‘ஓ’வென்று அலறினார் செட்டியார்.

விசாலாட்சி அம்மாள் கையிலிருந்த கிண்ணத்தைத் தடாலெனப் போட்டுவிட்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்; விழுந்து புரண்டாள்.

சீயக்காய் அரைத்துக் கொண்டிருந்த அம்மியில் தலையை முட்டிக் கொண்டு ‘ஓ’ வென்று கதறி அழுதாள் மருமகள்.

வேலாயுதம் தெருவுக்கு ஓடினான்.

வாசற்படியில் ‘ஓஹோஹோ’வென்று சிரிப்புச் சப்தம் கேட்டது; சாமியார் நின்றிருந்தார்.

“சாமியாரே, என்னெக் காப்பாத்தும்.. அந்தப் பாஷாணத்தை எடுத்துச் சாப்பிட்டுட்டேன். ஐயா பாஷாணத்தைச் சாப்பிட்டுட்டேன்..” என்று கட்டிய கோவணத்துடன் ஓடிவந்து கைகூப்பிக் கெஞ்சினார் வைரவன் செட்டி.

“அலட்டிக்காதீர்; சும்மா நிமிர்ந்து நில்லும். இந்தச் சீசா நெறைய அந்தப் பாஷாணம்தான் இருக்கு. தினம் ரெண்டு வேளை வெண்ணெயிலே குழைச்சிச் சாப்பிடும். உம்ம நெஞ்சுப் புகைச்சலுக்கு நல்லது. மனப் புகைச்சலுக்கு என்கிட்டே மருந்து கெடையாது. இது பவள பஸ்பம், சாப்பிடும், வலு ஏறும் ‘பெலஹீனம்‘ கொறையும்“ என்று சிரித்தார் சாமியார்.

அவர்கள் எல்லோரும் ஒரு கணம் திகைத்து நின்றது சாமியாரின் சிரிப்பொலியினால் அல்ல!

## பயிற்சி

### I. ஒரு வரியில் விடை தருக :-

1. வைத்தியர் சுவாமிகளின் சிரிப்பு சில சமயங்களில் எவ்வாறு இருந்தது?
2. புகைச்சல் வந்தால் தான் சாமியாரின் நினைப்பும் வருதோ என்று சாமியார் யாரிடம் கேட்டார்?
3. சாமியாரின் அகராதியில் 'பெலஹீனம்' என்றால் என்ன?
4. செட்டியார் எந்த தெய்வத்தை வேண்டிக் கொண்டார்?
5. வைரவன் செட்டியார் விஷமென நினைத்து உண்டது எதனை?

### II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. வைத்தியர் சுவாமிகள் சஞ்சரித்துக் கொண்டிருந்த நிலையை எழுதுக.
2. சாமியாருக்கும் செட்டியாருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
3. சுவாமிகளைச் சுற்றிப் பந்தலில் இருந்தவற்றை எழுதுக.
4. புகைச்சல் சிறுகதையில் தாத்தாவிற்கும் பேரனுக்கு இடையே நடந்த உரையாடலை எழுதுக.

### III. ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக:-

1. செட்டியார் சாமியாரிடம் தன் குமுறலை வெளிப்படுத்தும் விதத்தை விவரி.
2. சாமியார் குடிசையில் செட்டியார் இருந்த போது அவ்வழியே வந்து கொண்டிருந்த மகனைப் பார்த்து மனதில் எண்ணியவற்றை எழுதுக.
3. "வயதான காலத்தில் அவரை நல்லா வைச்சிருக்க வேண்டாமா?" என்று கேட்ட சாமியாருக்கு வேலாயுதம் கூறியவற்றை எழுதுக.
4. மகனுக்கு உடல்நிலை சரியில்லாத போது வைரவன் செட்டியார் காப்பாற்றிய விதத்தை எழுதுக!
5. "ஐயையோ தெய்வமே" புத்தியில்லாம விஷத்தைச் சாப்பிட்டேனே" என்று செட்டியார் கூறியவுடன் குடும்பத்தினர் நடந்து கொண்ட முறையை விவரி.

## IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-

1. "எஃகு நிறம் கண்டுவிட்டது. இன்னம் இரண்டு புடம் வச்சா தங்கமாயிடும்!"
2. "அட நன்றிக் கெட்டவனே உன்னை வளர்த்து ஆளாக்க என்ன பாடுபட்டிருப்பேன்!"
3. ஆசையா வாழ்ந்த பொண்டாட்டி மதிக்க மாட்டேங்கிறா?
4. "அவன் தான் கொள்ளி வைக்க வேண்டும்.
5. அடியும் பட்டு, பட்டினியும் கிடந்து சாகணுமா நான்?"

**குறிப்பு :**

பெற்றோர், பிள்ளைகள் உறவில் ஏற்படும் உறவுச் சிக்கல்களை ஆராய்க.

"முதியோர் இல்லம்" பெருகி வரக்காரணம் என்னவென்று வகுப்பில் கலந்துரையாடல் வைக்கலாம்.



## 5. மாத்திரை

ஆண்டாள் பிரியதர்ஷினி

ஒரே ஒரு மாத்திரை உடனடித் தேவையாய் இருந்தது. சரசுவுக்கு ஜுரம் கூடப் பொறுக்கலாம். தலைவலி கொடுமை நரகத்தின் நகல். கூடவே நிழலாய்க் குடியிருந்த பசிக்கு - ஒருவாய் ரொட்டி இருந்தாலும் சுகமாயிருக்கும் போலிருந்தது. வேறேதும் விழுங்கப் பிடிக்கவில்லை. வாய் விஷமாய்க் கசந்தது. நாக்கில் - எச்சில் நுரைத்து நுரைத்து மழமழத்தது. வாசனையோ, ருசியோ தெரிதாதபடிக்கு - மரத்துப் போன நிலை. தலை கிறுகிறுத்து வியர்த்துக் கொட்டியது அவளுக்கு. அணைந்து அணைந்து எரிந்த ஸ்டவ்வை விடவும், உடம்பெல்லாம் தகித்த காய்ச்சலில் சுலபமாய்ச் சோறு வெந்து விடுவது போல் அனல் கொதிப்பு. கண் இரண்டும் ஈரப் போர்வையாய்க் கனத்தன. காய் நறுக்கக் குனிய முடியவில்லை. புளி கரைக்க முடியவில்லை. அடுப்பை 'பம்ப்' பண்ண முடியவில்லை. கைகால் வெடவெட வென்று நடுங்கின.

அரிசி களைந்து போட்டுப் பக்குவமாய் வடிப்பதற்குள் கல்யாணத்துக்குச் சமைக்க மாதிரி அலமலந்து போனாள் சரசு. ஏனத்தை இறக்க முடியாமல், ஏற்ற முடியாமல் கைகள் கொளகொளத்தன குனிந்தால் - மூக்கிலிருந்தும், கண்ணிலிருந்தும் நீர் கொட்டியது....

காலையில் இப்படி இல்லை.

அதிகாலை நாலுமணிக்கு எழுந்து, இட்லி அவித்து அம்மியில் இழுத்து இழுத்து சட்னி அரைத்துத் தாளித்து, டிபன் பாக்ஸில் போட்டு, சுடச்சுட டீ வடித்து முருகேசனுக்குக் கொடுத்து, வெந்நீர் தயார் செய்து காலை ஷிப்டுக்கு அவனை அனுப்பிவிட்டுப் பாத்திரம் கழுவி, துணி துவைத்து, வீடு வாசல் பெருக்கி, குழந்தையை எழுப்பித் தயார் செய்து, ரிக்ஷா வராததால் - கணேஷைப் பாதிதூரம் இடுப்பில் தூக்கியும் பாதிதூரம் நடத்தியும் கூட்டிக்கொண்டு ஸ்கூலில் விட்டு வரும்போது கூடக் காய்ச்சல் இல்லை.

வரும்போது எதிரில் ரிக்ஷாக்காரன் வந்தான். 'மன்னிச்சுக்கம்மா டயர் பஞ்சராயிடுச்சு. ஒரே ரவுசு. சாயங்காலம் நா இட்டாந்துடறேன். நீ கவலைப்படாதே...' என்றதும் - புன்னகைத்துத் தலையசைத்த போது கூடத் தலைவலி, காய்ச்சலின் அறிகுறி இல்லை.

திடீரென்றுதான், அவள் மீது வலையாய்ப் படர்ந்து அமுக்கி விட்டது. குளித்து முடித்து வெளியே வருகையில் ஆரம்பித்த நடுக்கம் - இந்த நிமிஷம் வரைக்கும் குளிர் உதறி உதறிப் போடுகிறது. சூடாக ஒருவாய் டீ குடித்தால் இதமாய் இருக்கும். பால்இல்லை. காலையில் வாங்கும் ஓர் ஆழாக்குப் பால் என்னவெல்லாம் அவதாரம் எடுக்க முடியும்? இனிமேல் நாளை காலைதான் பால் தரிசனம் கிடைக்கும்.

சரசுவுக்கு வயிறு பசித்தது. எதுவுமே சாப்பிடப் பிடிக்காமல் குடல் - பந்தாய்ப் புரண்டு வயிற்றுக்குள்ளேயே சுழன்றது. டொக் டொக்கென்று மரங்கொத்தியாய்த் தலைவலி குதறியெடுத்தது. கண்ணைத் திறக்க முடியவில்லை. ஒரே தலைக்குள் - ராவணனின் பத்துத் தலையும் ஒட்டியிருப்பதாய்ப் பாரம் . உடம்பில்அடிக்கும் அனலுக்குக் கம்பளியை இறுக்கி மூடி - மூலையில் முடங்கினால் போதும் போலிருந்தது. முடியாதபடிக்கு நிர்ப்பந்தம்.

'மார்னிங் ஷிப்டு போயிட்டு வர்ற மனுசப் பயலுக்குச் சூடா ஒரு வாய் சோறு போட நாதியில்ல. என்னடி எழவு வெட்டி முறிக்கற?ம்?'

அலுவலகம் போய் வருவதையே இமயம் ஏறிய சாதனையாய்ப் பேசுவான் முருகேசன். அவனுக்குக் காய்ச்சலாயிருந்தால் நடமாட்டத்தைக் குறைத்துப் போர்வையால் மூடிக் கண்மூடிப் படுத்தே கிடப்பான்.

'சுள்ளுன்னு பொரிச்ச ரசம் வையி. பொட்டுக்கடலைத் தொவையல் அரை - நாக்கு செத்தே போச்சு....'

'கொஞ்சம் தைலம் தேய்ச்சுவுடு' உடம்பைப் புடிச்சுவுடு.

ஒவ்வொரு உத்தரவாய்க் கிளம்பும்.

அப்படி உத்தரவு போட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிட முடியாத படிக்குப் பெண் பிறப்பு. உத்தரவை நிறைவேற்றுதலே வரம் என நினைச்சுப் பழக்கப்பட்ட பெண் பிறப்பு. தன் பசிக்குத் தானே சமைத்தலை விடவும் பட்டினி பரமசுகம் என்றிருந்தது சரசுவுக்கு.

ஆனாலும் வயிறு விடாமல் கூவியதில் ஒரு துண்டு பிரெட் சாப்பிட்டால் பசி அமர்த்தலாம் போலிருந்தது. குழந்தைக்கு பிரெட் ரொம்பவே பிடிக்கும் என்பதால் மிச்சமிருந்த மூணு துண்டுகளைப் பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு, கணேஷுக்குக் காலையிலேயே அனுப்பியிருந்ததில் - அவளுக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமான் எதுவுமே வீட்டில் இல்லை.

குழம்பு கொதித்து வரும்போது ஸ்ஸ்ஸ் ஸென்று பயமுறுத்திப் புகைந்து அணைந்து போனது அடுப்பு.

"அடக் கடவுளே... என்னா கொடுமை இது?"

குனிந்து வால்வைக் கழற்றி - ஓரத்தைச் சுற்றியும் மண்ணெண்ணெய் தடவிச் சரி செய்தாள். ஸ்டவ் பின் எடுத்துத் துளை குத்தி - டாங்க்கில் எண்ணெய் ஊறிப் பற்ற வைத்துக் கை கழுவிக் குழம்புப் பாத்திரத்தை மறுபடியும் ஏற்றுவதற்குள் மூக்கு ஒழுகி,தலைவலியில் மண்டை பிளந்து, வியர்த்து ஊற்றிக் கண்திறக்க முடியாமல்உயிர் போனது மாதிரி நொறுங்கிப் போனாள் சரசு.

உதவிக்கென்று சுடு கஞ்சி கூடப் பக்கத்தில் இல்லாத ஒற்றைக் குடித்தனம் அது. வாடகை குறைச்சல் என்பதால் ஊர்க்கோடியில் வீடு. அடுத்த மனிதர்,அடுத்த முகம், அடுத்த வார்த்தை, அடுத்த கதை - எதற்குமே மாங்கு மாங்கென்று ஒரு கிலோமீட்டர்

நடந்தே போக வேண்டிய நிர்ப்பந்தம். தனிமையோடு பேசித் தனிமையோடு சுவாசித்துத் தனிமையோடு சிலாகித்து உழல வேண்டிய தனிமை நரகம்.

அவன் வந்தான்.

சிவந்த கண்ணும், வீங்கிய மூக்கும், கலைந்த தலையும், கனத்தப் போர்வையுமாய் இருந்தவளைப் பார்த்ததும் எரிச்சலானான்.

"என்னாச்சு? வேஷம் போடற?"

"ஜு..ஜுரம்.."

"க்கும். ஆவூன்னா அதுமட்டும் வந்துரும்.."

"சமைச்சியா? அதிலேயும் மண்ணா?"

"பண்ணிட்டேன்.."

"சரி தட்டுப் போடு. கிளம்பணும்.."

சிடுசிடுத்தான். லுங்கிக்கு மாற்றிக் கைகால் கழுவி உட்கார்ந்த நிமிஷத்திலிருந்து ஆதுரமாய் அக்கறையாய் நிமிர்ந்து கூடப் பார்க்காமல்.. அவுக் அவுக்கென்று அள்ளிப் போட்டுக் கொண்டான்.

"நின்னு பரிமாறாமச் சுருண்டு சுருண்டு படுத்துக்க எல்லாம் நா வாங்கி வந்த வரம். என்னாத்துக்கு நா கல்யாணம் கட்டினேன்னு தெரியல... நானே போட்டுக்கணும். நானே கொட்டிக்கணும்."

கொதிக்க கொதிக்க வார்த்தைகளை வெளியே தள்ளிச் சோற்றை உள்ளே தள்ளினான். கை கழுவினான். மறுபடியும் பேண்ட் மாட்டினான்.

உட்கார முடியாமல், நிற்க முடியாமல் சுருண்ட சரசுவை ஏறிட்டுப் பார்க்கவில்லை. 'ஜுரம் போயிரும்' ஆறுதலாய்த் தொட்டுப் பார்க்கவில்லை. 'தலைவலியா?' என்று நெற்றி பிடிக்கவில்லை. 'வா மடிலபடு,மருந்து போடறேன்' என்று கரிசனம் காட்டவில்லை.

"நா கௌம்பறேன்.."

"வெளீல போறீங்களா?"

"பார்த்தா எப்படித் தெரியுது.."

"மாத்திரை வாங்கித் தாங்களேன், மண்டை ஒடைக்குது.."

"ப்ச. கடை தூரமாச்சே.."

"அஞ்சு நிமிஷத்துல போயிட்டு வந்துறலாம். வண்டிதான ?"

"ஆமாமா- உங்கொப்பன் வாங்கிக் குடுத்த டாடா சுமோ-காத்து மாதிரி பறக்கலாம் பாரு. தரித்திரம் புடிச்ச மொபெட். உதைச்சு உதைச்சு தொடை வீங்குது... பாடைல போற மாதிரி இருக்கு. கூட நடக்கறவனே இதுக்கு முன்னாடி போயிடறான்."

டப்டப் என்று அக்குளில் பவுடர் போட்டான்.

"ப்ரெட் சாப்பிடணும் போல இருக்கு. காலைலேருந்து ஒண்ணுமே சாப்பிடல்ல.."

"ஒருவேளை சாப்பிடாட்டி உசிரு போவாது. ஒவ்வொருத்தன் பொண்டாட்டி கண்ணுங் கருத்துமா இருக்கா.. இவனுங்க மண்டைக்கு ஒரு கவலையும் ஏத்தறதில்லை. எனக்குத் தான் எல்லா எழவும் எல்லாத்துக்கும் நானே மாரடிக்கணும்".

குனிந்து அக்கறையாய்க் கண்ணாடியில் தலைசீவினான்.

“படம் ரிலீசாயி ஒரு மாசமாச்சு. இன்னிக்குத்தான் டிக்கெட் கெடைச்சிருக்கு. தலைவரு படம். கடைக்கெலாம் போனா உருப்பட்ட மாதிரிதான். இதுவே லேட்டு, ஓடணும் மத்தியான ஷோ சினிமா ஆரம்பிச்சிருவான்டி.”

செருப்பை மாட்டினான். டுர்ர்ரென்று கிளம்பியது மொபெட் கல்யாணச்சீர்.

ஒன்றுமே முடியாமல் போர்த்திக்கொண்டு முடங்கினாள் சரசு. உடம்பு உதறிப் போட ஆரம்பித்தது. தலைவலியும், வாய்க்கசப்பும், கண்ணீருமாய்ப் படுத்தவள் கண் அசந்ததே தெரியவில்லை.

மூணரைக்கு - “கணேஷ் வந்து கதவு தட்டினான்.

கண்ட கண்ட இடத்திலும் நாய் மாதிரி கால் தூக்கக் கூடாது என்று பழக்கி இருப்பதால் குழந்தைக்கு அவசரம்.

“அம்மா.. சீக்கிரம் தொறம்மா. ச்சூ போகணும்..”

அவசரக் குரலுக்குப் பதறி எழுந்தாள் சரசு. தட்டாமலே சுற்றியது அறை. கண் திறக்கவே முடியவில்லை. வாந்தி வரும் போலிருந்தது. மின்னலாய் வெட்டி வெட்டி கண்ணுக்குள் வலி வெளிச்சம் பாய்ந்தது.

ஜிவுஜிவு என்று வீங்கி, பொங்கிப் போயிருந்த சரசுவின் முகம் கணேஷுக்கு என்ன சொன்னதோ தெரியவில்லை. பதறிப் போனது குழந்தை. புத்தகப் பையை உதறி. பாத்ரூம் போவதையும் மறந்து அம்மாவோடு ஒட்டிக் கொண்டது.

“ஸ்ஸ்ஸ் சுடுதும்மா. ஜுரம்...” கண்டுபிடித்தது.

“ம்..”

“அப்போ- இந்தா.”

சாப்பாட்டுக் கூடையிலிருந்த பிளாஸ்டிக் டப்பா திறந்து “இந்தாம்மா.. பிரெட் சாப்பிடு. ஜுரத்துக்கு பிரெட்தான் எனக்குத் தருவ?”

காய்ந்து வறட்டென்றிருந்த ரொட்டியைப் பிய்த்து அம்மா வாயில் திணித்தது குழந்தை.

“தின்னும்மா - ஜுரம் போயிடும்..”

மனசு முழுக்க அக்கறையோடு, பிஞ்சு விரலால் அவளின் முகம் வருடியது. முகத்தின் காய்ச்சல் சூடு பொருட்படுத்தாமல் பிஞ்சு உதட்டால், அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டது.

“முத்தம் குடுத்தா ஜுரம் போயிடும்னுதான சொல்வே?”

காலையிலிருந்து தேடிய மாத்திரை கிடைத்துவிட்டது. மாத்திரை என்றால் உருண்டையாய், தட்டையாய் கசப்பாய்த்தான் இருக்க வேண்டுமா என்ன? அழுத்தமாய் முத்தம் வடிவிலும்,வார்த்தை வடிவிலும் இருக்கலாம் தானே? உள்ளே முழுங்கினாள் சரசு.

## பயிற்சி

### I. ஒரு வரியில் விடை தருக :-

1. சரசுவின் காய்ச்சலுக்கு ஆசிரியர் கூறும் உவமை யாது?

2. முருகேசன் அலுவலகம் போய் வருவதை எதைப் போன்ற சாதனையாய் பேசுவான்?

3. சரசு பசியைப் போக்க என்ன சாப்பிட நினைத்தாள்?

4. சரசு முருகேசனிடம் என்ன வாங்கித் தரும்படி கேட்டாள்?

5. சரசுவின் மகனின் பெயர் என்ன?

## II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:-

1. சரச தலைவலியால் அவதிப்பட்டதை எழுதுக.

2. முருகேசனுக்குக் காய்ச்சல் வந்தால் அவன் என்ன செய்து கொள்வான்?

3. சரசு ஸ்டவ்வை எவ்வாறு பற்ற வைத்தாள்?

4. சரசு தன் கணவனிடம் எதிர்பார்த்த கரிசனங்களை எழுதுக.

5. முருகேசன் தன் மாமனார் வாங்கித் தந்த வண்டியைப் பற்றி சரசுவிடம் கூறியது என்ன?

6. முருகேசன் அவசரமாகக் கிளம்பிச் செல்வதற்கான காரணங்களாகச் சரசுவிடம் கூறியவற்றை எழுதுக.

## III. ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக:-

1. சரசுவின் காலை நேரப் பணிகளைப் பற்றி எழுதுக.

2. சரசு குடியிருந்த குடியிருப்புச் சூழ்நிலைப் பற்றி எழுதுக.

3. அலுவலகம் சென்று வந்த பிறகு முருகேசன் செய்யும் செயல்களை வரைக.

4. சரசுவின் முகத்தைப் பார்த்த மகன் கணேஷ் என்னவெல்லாம் செய்தான் என்பதை விவரி.

## IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-

1. “மார்னிங் ஷிப்டு போயிட்டு வர்ற மனுசப் பயலுக்குச் சூடா ஒரு வாய் சோறு போட நாதியில்ல. என்னடீ எழவு வெட்டி முறிக்கிற?ம்?”.

2. “அஞ்சு நிமிஷத்துல போயிட்டு வந்துறலாம் வண்டிதான?”

3. “எனக்குத் தான் எல்லா எழவும். எல்லாத்துக்கும் நானே மாரடிக்கணும்”.

4. “மாத்திரை என்றால் உருண்டையாய், தட்டையாய் கசப்பாய்த்தான் இருக்க வேணுமா என்ன?

**குறிப்பு :**

தந்தை-மகள் பாசத்தை விளக்கும் வகையில் சிறுகதை ஒன்றை எழுதவும்.